எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனித குலத்தின் மீதான அன்பு
பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்-11
பக்கம் 13

பராஹீனே அஹ்மதிய்யா (தொடர்-11)
பக்கம் 17

குழந்தைகளின் திரைநேரத்தின் (Screen Time) விளைவுகளும் இஸ்லாமியக் கண்ணோட்டமும்
பக்கம் 22

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | August 2026 | Vol. 5 - Issue No. 9
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

لَقَدْ جَآءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ
عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ
عَلَيْكُم بِٱلْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ

(நம்பிக்கை கொண்டவர்களே!) உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கேற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வங்கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர் –களை நேசிப்பவராகவும் அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராகவும் இருக்கின்றார். (9:128)



# ஹதீஸ்

قَالَ عَبْدُ اللَّهِ كَأَنِّي أَنْظُرُ إِلَى النَّبِيِّ صلى الله
عليه وسلم يَحْكِي نَبِيًّا مِنَ الأَنْبِيَاءِ ضَرَبَهُ
قَوْمُهُ فَأَدْمَوْهُ، فَهْوَ يَمْسَحُ الدَّمَ عَنْ وَجْهِهِ
وَيَقُولُ رَبِّ اغْفِرْ لِقَوْمِي، فَإِنَّهُمْ لاَ يَعْلَمُونَ.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின் –றார்கள்: அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், தமது மக்களால் தாக்கப்பட்ட ஒரு நபியின் நிகழ்வை எடுத்துரைப்பதை நான் நினைவு கூர்கிறேன். அந்த நபி தனது முகத்தில் இருந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே இவ்வாறு கூறினார்: ‘என் இறைவனே என் மக்களை மன்னிப்பாயாக. அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.’

(புகாரி ஹதீஸ் எண். 6929)

# எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனித குலத்தின் மீதான அன்பு

**மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் ஹயாத் சாஹிப்**
(Amir, Jama'at Ahmadiyya, UK)

*தமிழாக்கம்: K.A. தாரிக் அஹ்மத், மேலப்பாளையம்*



நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் என்ற மாபெரும் இறைத்தூதரின் (ஸல்) வருகை, உலகம் அறியாமை இருளால் சூழப்பட்டிருந்ததோடு மட்டுமல்லாது, கொடூரமே இயல்பாகிப் போன ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்தது. பழங்குடி பெருமையே ஒழுக்கத்தை நிர்ணயித்த ஓர் உலகம் அது. வலிமை வாய்ந்தவர்கள் பலவீனமானவர்களின் மீது தங்கள் விருப்பத்தைத் திணித்த ஓர் உலகம் அது. பெண் குழந்தைகள் பெறுவது அவமானமாகக் கருதப்பட்டு உயிருடன் புதைக்கப்பட்ட ஓர் உலகம் அது. பழிவாங்குதல் ஒரு தனிச் செயலாக அல்லாமல் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து கடத்தப்பட்ட ஓர் உலகம் அது. இரக்க குணம் பலவீனமாகத் தவறாகக் கருதப்பட்ட நீதிக்கும் அதிகாரத்திற்கும் வேறுபாடற்ற ஓர் உலகம் அது.

அத்தகைய உலகிற்கு, அல்லாஹ் ஒரு மனிதரை அனுப்பினான். கருணையைப் பற்றிப் பேசுபவராக மட்டுமல்லாமல், கருணையின் உருவமாகவும் திகழ்ந்த மனிதர். அந்த மனிதர் எம்பெருமானார் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மிகவும் நேசத்துக்குரிய தூதர் ஆவார்கள். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: "மேலும் நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பினோம்." (சூரா அல்-அன்பியா 21:108)

இவ்வசனம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையை நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமானது என்று வரையறுக்கவில்லை; அன்னாரது சமுதாயத்திற்கு மட்டுமானது என்று கட்டுப்படுத்தவில்லை; அன்னாருடைய காலத்திற்கு மட்டுமானது என்று சுருக்கவில்லை; அது உலகளாவிய ஒரு கருத்தைப் பிரகடனம் செய்கிறது. அது என்னவென்றால், அன்னாருடைய இருப்பே அனைத்துப் படைப்புகளுக்கும் ஒரு கருணையாகும் மனிதகுலத்தின் மீதான அன்னாரது அன்பே, அன்னாருடன் பிண்ணிப் பிணைந்திருக்கும் அவர்களது மகத்தான பாரம்பரியம் ஆகும்.

அல்லாஹ் மேலும் சாட்சியமளிக்கிறான்: "நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலை பெற்றுள்ளீர்." (சூரா அல்-கலம் 68:5)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குணநலன்கள் குறித்து அன்னாரது கண்ணியமிக்க மனைவியான ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, நூற்றாண்டுகளாக அறிஞர்களைச் சிந்திக்க வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஆழமான ஒரு பதிலை அவர்கள் வழங்கினார்கள்:

"குர்ஆனே, அன்னாருடைய குணநலனாக இருந்தது." அதாவது, ஒவ்வோர் இறைபோதனையின் முழுமையான மனித வெளிப்பாட்டின் உருவமாக அன்னார் திகழ்ந்தார்கள். மனிதகுலத்தின் மத்தியில் நடந்து, பேசி, மன்னித்து, அன்பு செலுத்தி, வாழ்ந்து வந்த குர்ஆனாக அன்னார் இருந்தார்கள். நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை, கருணை, இரக்கம், பரிவு நேர்மை ஆகியவற்றின் உயரிய இலட்சியங்களின் உருவகமாக இருந்தது. இன்று உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்களுக்கு வழிகாட்டும் உலகளாவிய அன்பு மற்றும் சமூக சீர்திருத்தத்தின் பாரம்பரியத்தை அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னார் தமது வாழ்நாள் முழுவதும் ஒருபோதும் வயிறு நிறைய உணவு உண்டதில்லை, விலையுயர்ந்த ஆடையும் அணிந்ததில்லை. அன்னாரது வீடு ஒரு மண் குடிசையாக இருந்தது; அன்னாரது அரசவை பள்ளிவாசலாக இருந்தது; அன்னாரது அரியணை அதன் புழுதி படிந்த தரையாக இருந்தது. அன்னாரது படுக்கை வைக்கோலால் ஆனது. அன்னாரது கையே, தலையணையாக இருந்தது. மாதக்கணக்கில் அன்னாரது வீட்டின் அடுப்பில் நெருப்பு எறிந்ததில்லை. சமைப்பதற்கு எதுவும் இருந்ததில்லை. அன்னாரது குடும்பம் பேரீச்சம்பழங்கள் அல்லது ஆட்டுப்பாலை உண்டு வாழ்ந்தது அல்லது பசியுடன் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் தங்கமோ வெள்ளியோ வைத்திருக்கவில்லை. தங்களுக்குக் கிடைத்த அனைத்தையும் ஏழைகளுக்கு கொடுத்து விட்டார்கள். அன்னார் இறந்தபோது வீட்டில் சிறிதளவு வாற்கோதுமையைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

வளமான ஒரு சமூகம் வலுவான குடும்பங்களின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்படுகிறது என்பதை மாநபி (ஸல்) அவர்கள் உறுதியாக நம்பினார்கள். குடும்பங்கள் நேர்மை மற்றும் பணிவு ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் வலிமையான, அன்பான பிணைப்புகளைக் கொண்டிருந்தால், அது கருணையும் நீதியும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்க உதவுகிறது.

தமது இல்லத்தில் அன்னார் அடக்க குணத்தின் பண்புருவமாகத் திகழ்ந்தார்கள். அன்னார் வீட்டு வேலைகளில் உதவினார்கள், தமது சொந்த ஆடைகளைத் தாமே

சரிசெய்து கொண்டார்கள், மேலும் குடும்ப வாழ்க்கையை ஆன்மிகத்திலிருந்து வேறுபட்டதாகக் கருதாமல், அதன் மிக உயரிய வெளிப்பாடாகவே கருதினார்கள்.

இந்த அன்பின் அடித்தளத்திலிருந்து, அவர்கள் தனிப்பட்ட நலன்களை விட நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள். புகழ்பெற்ற ஒரு நிகழ்வு உள்ளது. ஓர் உயர்குடி இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடினார். அப்பெண்ணின் சமூக அந்தஸ்தைக் கருத்தில் கொண்டு சிலர் அவருக்காகப் பரிந்து பேச முற்பட்டனர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதியாகப் பதிலளித்தார்கள்:

“உண்மையில், என்னுடைய மகளான ஃபாத்திமா ஒரு குற்றம் செய்தாலும், அதற்கான தக்க தண்டனையை விதிக்க நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்.” (புகாரி, கிதாபுல் ஹுதூத்).

இஸ்லாத்தில் நீதி என்பது பாரபட்சமற்றது; அது அந்தஸ்து, செல்வம் அல்லது குடும்ப உறவுகளுக்காக ஒருபோதும் வளைந்து கொடுப்பதில்லை. இருப்பினும், நீதியுடன், ஈடிணையற்ற மன்னிப்பும் இருந்தது. அன்னாருக்கு ‘அஸ்ஸாதிக்’ மற்றும் ‘அல்-அமீன்’ என்ற பட்டங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒழுக்கம் மற்றும் அரசியல் ஆகிய இரண்டு விஷயங்களிலும் அன்னார் ஒரு மாபெரும் தலைவராகக் கருதப்பட்டார்கள். அனைவருடனும் அன்னார் கொண்டிருந்த தொடர்புகளில் தொடர்ந்து வெளிப்படுத்திய நேர்மை மற்றும் உண்மையின் காரணமாக, அன்னாரது நேர்மை இளம் வயதிலிருந்தே நிலைநாட்டப்பட்டது. ஹஜருல் அஸ்வத் (கருங்கல்) தொடர்பான சர்ச்சையின்போது, இளம் வயது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்தபோது, மக்கத்து தலைவர்கள் ‘அல் அமீன் வந்து விட்டார்’ என்று அறிவித்து, அன்னாரைத் தங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண்பவராக ஏற்றுக் கொண்டனர்.




அன்னார் எப்போதுமே கனிவும் வாய்மையும் கொண்டவராக அறியப்பட்டார்கள். மனிதகுலத்தின் மீதான அன்னாரது அன்பில் அந்தப் பண்புகள் வெளிப்பட்டன. எனினும், அன்னார் தமது நபித்துவ வாதத்தை முன்வைத்த போது, கடும் எதிர்ப்பை சந்தித்தார்கள். நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், தமது சக மக்காவாசிகளின் கைகளால் 13 ஆண்டுகள் துன்புறுத்தலையும் கொடுமையையும் தாங்கிக் கொண்டார்கள். இக்காலகட்டத்தில் அன்னாரது சஹாபிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். சில சமயங்களில் கொல்லப்பட்டும் உள்ளனர். அன்பிற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்களும் கூட இந்த கொடுமைகளுக்கு ஆளானார்கள். அன்னார் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, விலங்குகளின் குடல் பகுதிகள் அன்னார் மீது வீசப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது. அன்னாரது வாழ்க்கையில் மிகவும் ஆபத்தான தருணங்களில் ஒன்று ‘தாயிஃப்’ நகரில் நிகழ்ந்தது. அங்குள்ள மக்களும் அவர்களின் குழந்தைகளும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது கற்களை வீசித் தாக்கினர். இதனால் அன்னாரது உடல் முழுவதும் இரத்தம் வழியும் நிலை ஏற்பட்டது. அப்போது, அந்த மக்களை அழித்து விடுவதற்கான அனுமதியைக் கோரி மலைகளின் வானவர் (மலக்கு) அன்னாரிடம் வந்தார். ஆயினும் அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்:

“இறைவா! அவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று அறியாமல் இருக்கிறார்கள். எனவே நீ அவர்களுக்குப் புரிதலை வழங்குவாயாக. மேலும் அவர்களை இஸ்லாத்தின் குடையின் கீழ் கொண்டு வருவாயாக.”

வலி வேதனையிலும் கூட, அன்னார் பழிவாங்குதலைப் பற்றி அல்லாமல், வருங்கால சந்ததியினரைப் பற்றியே சிந்தித்தார்கள்.

மேலும் அல்லாஹ் அன்னாரைக் குறித்து இவ்வாறு அழகாக விவரித்தான்: “(நம்பிக்கை கொண்டவர்களே!) உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கேற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவராகவும் அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராகவும் இருக்கின்றார்.” (சூரா அத் தவ்பா 9:128)

அவர்களது வாழ்நாள் முழுவதும், தமது இயல்பு எவ்வளவு கருணையும் இரக்கமும் நிறைந்ததாக இருந்தது என்பதை அன்னார் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தினார்கள். மக்கள் தம்மைப் பற்றி எப்படி உணர்ந்தாலும், அன்னார் யாரிடமும் எந்த வெறுப்பையோ இகழ்ச்சியையோ ஒருபோதும் கொண்டிருக்கவில்லை.

ஓர் அறிவிப்பு வருகிறது. மக்காவின் ஒரு சூனியக்காரரைப் பற்றி கெட்ட விஷயங்களைக் கேள்விப்பட்ட ஒரு வயதான பெண்மணி இருந்தார். அவர் மக்காவிற்குச் சென்றிருந்தபோது, இந்த மந்திரவாதி கண்ணில் பட்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். ஆனால், அவர் அங்கு வந்தடைந்தபோது, அவர் சந்தித்த முதல் நபர் வேறு யாருமல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான். இந்த சூனியக்காரரை எவ்வகையிலும் தவிர்க்க வேண்டும் என்ற தமது எண்ணத்தை அவர் அன்னாரிடம் தெரிவித்தார். அந்தப் பெண் சுமந்து வந்திருந்த மூட்டையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கிக் கொண்டு, அதற்கான விளக்கத்தை பிறகு தருவதாகவும், முதலில் அவரை அவரது இருப்பிடத்திற்குச் செல்ல உதவுவதாகவும் கூறினார்கள். அவரைப் பாதுகாப்பாக அவரது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ற பிறகு, அவரிடம் தாங்கள்தான் அவர் கேள்விப்பட்ட அந்த சூனியக்காரர் என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அதைக் கேட்ட அந்தப் பெண், அவரது சூனியம் நிச்சயமாக தன் மீது வேலை செய்து விட்டதாகவும், அன்னாரது மார்க்கத்தை தான் ஏற்றுக்கொள்ள விரும்புவதாகவும் கூறினார். அவ்வாறாக அவர் இஸ்லாத்தைத் தழுவினார் - அல்ஹம்துலில்லாஹ்.

மாநபி (ஸல்) அவர்கள், எதிர்ப்பு, துன்புறுத்தல் மற்றும் மரண அச்சுறுத்தலை எதிர்கொண்ட எண்ணற்ற நிகழ்வுகள் உள்ளன. இருப்பினும், அன்னார் எப்போதும் நீதியின் பாதையிலேயே உறுதியாக நின்றார்கள். போர்க்காலச் சூழலிலும் கூட அனைவரும் நியாயமாக நடத்தப்படுவதை உறுதி செய்வதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். அன்னார் பெரும்பாலும் கைதிகளை விடுவித்தார்கள். எதிர்த்தரப்பினரை கனிவுடன் நடத்தினார்கள், ஒருபோதும் திருடவோ கொள்ளையடிக்கவோ மாட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் எப்போதும் பாதுகாப்புடனும், போர்க்களத்தில் இருந்து வெகு தொலைவில் வைக்கப்படுவதையும் அன்னார் உறுதி செய்தார்கள்.

பல ஆண்டுகால துன்புறுத்தல், அவமானம் மற்றும் நாடு கடத்தலுக்குப் பின்னர், மக்கா வெற்றியின்போது, ஒரு காலத்தில் தம்மை வெளியேற்றியவர்களுக்கு முன்னால் நின்ற மாநபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார்கள்.

தமது மாபெரும் வெற்றிகளுக்குப் பின்னரும், அன்னார் தமது பதவியையோ அந்தஸ்தையோ ஒருபோதும் நிலங்களைக் கொள்ளையடிப்பதற்கோ பழிவாங்குவதற்கோ ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அன்னார் மதீனாவின் அரசியலமைப்பை உருவாக்கினார்கள். அது மார்க்க சுதந்திரம், பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒன்றிணைந்த இறையாண்மை கொண்ட தேசத்தை நிறுவியது.

அரசியலமைப்பின் முதல் பிரிவு, 'ஒரே தேசம்' என்ற கருத்தை நிலைநாட்டியது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் என அனைத்து மார்க்கத்தினரும், அவர்களின் நம்பிக்கைகள், இனம் அல்லது வம்சாவளியைக் கடந்து மதீனாவின் பாதுகாக்கப்பட்ட குடிமக்களாக இருந்தனர். அவர்கள் தாங்கள் விரும்பியவாறு தமது மார்க்கங்களைப் பின்பற்ற சுதந்திரம் பெற்றிருந்தனர். அரபுக் கோத்திரங்கள் ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டதால், பழங்குடிச் சண்டைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. இது 1215-ஆம் ஆண்டின் 'மாக்னா கார்ட்டா' (Magna Carta) எனப்படும் ஆங்கில நிலப்பிரபுத்துவ உரிமைகள் சாசனத்திற்கு ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்டது.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு ஒரு விடுதலை ஆண்டாகக் கருதப்படுகிறது, ஏனெனில் எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் செயின்ட் கேத்தரின் மடாலயத்தின் மதகுருமார்களுக்கு சாசனம் ஒன்றை வழங்கினார்கள். இச்செயல் கிறிஸ்தவர்களுக்கு சலுகைகளையும் வசதிகளையும் உறுதி செய்தது.

அன்னார் அனைத்து மார்க்கங்களுடனும் ஒப்புரவு கொள்பவராக இருந்தார்கள். ஓர் அறிவிப்பு வருகிறது: ஒருமுறை, அரபு நகரமான நஜ்ரானைச் சேர்ந்த கிறிஸ்தவர்களின் ஒரு பிரதிநிதிக் குழுவினர் மதீனாவில் இருந்த இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, அக்குழுவினர் சற்றே அமைதியிழந்து காணப்பட்டனர் இதனைக் கண்ட இறைத்தூதர் (ஸல்), ஏதேனும் சிக்கலா என்று அவர்களிடம் விசாரித்தார்கள். அதற்கு அவர்கள், தங்கள் வழிபாட்டிற்கான நேரம் வந்துவிட்டதாகவும், ஆனால் பிரார்த்தனைகளை அல்லது சடங்குகளை மேற்கொள்வதற்குத் தகுந்த இடம் தங்களுக்கு இல்லை என்றும் தெரிவித்தனர். இதைக் கேட்ட இஸ்லாத்தின் தூதர் (ஸல்), மதீனாவில் உள்ள தமது பள்ளிவாசலிலேயே அக்கிறிஸ்தவர்களைத் தங்கள் மரபுகள் மற்றும் வழிமுறைகளின்படி வழிபாடு செய்துகொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுத்தார்கள்.

இந்த தாராளமான மற்றும் உன்னதமான செயலின் மூலம், இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள், மனிதகுலம் அனைத்திற்குமான சகிப்புத்தன்மை, மத சுதந்திரம், வழிபாட்டு சுதந்திரம் ஆகியவற்றிற்கான என்றென்றும் நிலைத்திருக்கும் முன்மாதிரியை நிலைநாட்டினார்கள்.

அன்னார் தமது காலகட்டத்தின் மிகவும் நீதியான மற்றும் கனிவான தலைவர்களில் ஒருவராக வரலாற்றில் அறியப்படுகிறார்கள். அன்னாருக்கு அதிகாரமும் ஆட்சிப் பொறுப்பும் வழங்கப்பட்டபோது, நீதி மற்றும் அமைதி நிலவும் ஒரு சமூகத்தை உருவாக்க அதனைப் பயன்படுத்தினார்கள் விரிவான மற்றும் நியாயமான நிர்வாகச் சட்டங்களை உருவாக்கியதன் மூலம் இது சாத்தியமாக்கப்பட்டது.

மார்க்க, இன மற்றும் கொள்கை வேறுபாடின்றி அனைவரிடமும் அன்னார் எப்போதும் மரியாதையுடன் நடந்துகொண்டார்கள். ஓர் அறிவிப்பு வருகிறது: ஒருமுறை, இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் அன்னாரது சஹாபிகளும் இருந்த இடத்தின் வழியாக ஒரு ஜனாஸா சென்றபோது, அன்னார் உடனடியாக எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். அப்போது ஒரு சஹாபி, 'அல்லாஹ்வின் தூதரே! இது ஒரு யூதரின் இறுதிச் சடங்கு' என்று கூறினார். அதற்கு நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், 'அவர் ஓர் மனித ஆன்மா அல்லவா?' என்று பதிலளித்தார்கள்.

உயிர்கள் அனைத்தும் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் படைக்கப்பட்டதால், ஒவ்வொரு மனிதரும் இயல்பான கண்ணியத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை அன்னார் ஒற்றை வாக்கியத்தில் கற்பித்தார்கள்.

ஓர் உயர்குடி இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடினார். அப்பெண்ணின் சமூக அந்தஸ்தைக் கருத்தில் கொண்டு சிலர் அவருக்காகப் பரிந்து பேச முற்பட்டனர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதியாகப் பதிலளித்தார்கள்:

**'உண்மையில், என்னுடைய மகளான ஃபாத்திமா ஒரு குற்றம் செய்தாலும், அதற்கான தக்க தண்டனையை விதிக்க நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்.'**

(புகாரி, கிதாபுல் ஹூதூத்).

புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, நமது அன்பிற்குரிய இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:



“அன்னார் மனிதகுலத்தின் மீட்பர் என்றே அழைக்கப்பட வேண்டும். அன்னாரைப் போன்ற ஒருவர் நவீன உலகின் சர்வாதிகாரப் பொறுப்பை ஏற்பாரானால், உலகிற்கு மிகவும் அவசியமான அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும் வகையில் அதன் பிரச்சினை -களைத் தீர்ப்பதில் அவர் வெற்றி பெறுவார் என்று நான் நம்புகிறேன். இன்றைய ஐரோப்பாவிற்கு ஏற்புடையதாக மாறத் தொடங்கியிருப்பதைப் போலவே, நாளைய ஐரோப்பாவிற்கும் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கம் ஏற்புடையதாக இருக்கும் என்று நான் தீர்க்கதரிசனம் கூறியுள்ளேன்.”

வரலாற்றாசிரியர் ஆர். போஸ்வொர்த் ஸ்மித், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்க நம்பிக்கையின் நேர்மையை ஒப்புக்கொள்கிறார், அவர் கூறுகிறார்:

“முஹம்மது (அவர்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) தமது வாழ்க்கையின் இறுதி வரை, தமது பண்புகளின் அழகிய மகுடமாக விளங்கிய அடக்கத்தையும் எளிமையையும் பேணிக்காத்தார்கள். நபி அவர்கள் ஒரு இறைத் தூதருக்கும் மேலானவராக ஆனார்கள். திருக்குர்ஆன் மற்றும் உலகியல் வழிமுறைகளின் துணைகொண்டு ஒரு ஆட்சியாளராகவும் ஆனார்கள்.”

பலருடைய உரிமைகளுக்காக அன்னார் போராடிய போதிலும், துரதிர்ஷ்டவசமாகத் தமது வாழ்நாள் முழுவதும் பல தனிப்பட்ட அநீதிகளை எதிர்கொண்டார்கள். ஓர் அறிவிப்பு வருகிறது: ஹப்பார் என்ற நபர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வியான ஸைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்கு ஒரு வகையில் காரணமாக அமைந்திருந்தார். அவர் ஈரானுக்குத் தப்பிச் சென்றிருந்தார். ஆனால், அங்கிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து மன்னிப்பு கோர வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அதன்படி அவர் மக்காவிற்குத் திரும்பி வந்து மன்னிப்பு கோரினார் அவர் மன்னிக்கப்பட்டார்.

அபூ சுஃப்யானின் மனைவியான ஹிந்தாவும், வஹ்ஷி என்ற அடிமையும் நபிகளாரின் சிறிய தந்தையான ஹம்ஸாவின் உடலைச் சிதைத்திருந்தனர். அவர்கள் இருவருமே மன்னிக்கப்பட்டனர்.

ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்! நம்மில் யாரேனும் இத்தகைய இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், நாம் இவ்வளவு மன்னிக்கக் கூடியவர்களாக இருந்திருப்போமா? மன்னிக்கக் கூடியவர்களே நம்மில் மிகச் சிறந்தவர்கள் என்று நபியவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறினார்கள்: “உங்களுக்கு அநீதி இழைத்தவரை மன்னியுங்கள். உங்களை விட்டு விலகிச் சென்றவருடன் உறவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தீமை செய்தவருக்கு நன்மை செய்யுங்கள். மேலும் உண்மையே பேசுங்கள். அது உமக்கே எதிராக இருந்தாலும் சரி.”

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சஹாபிகளுடன் உணவு உண்ண அமர்ந்திருந்தார்கள். ஸைனப் என்ற யூதப் போர் வீரரின் மனைவி ஒருவர் வறுத்த இறைச்சியைச் சமைத்து, அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வறுக்கப்பட்ட ஆட்டுத் தோள் பகுதியிலிருந்து ஒரு வாய் இறைச்சியை எடுத்து வாயில் வைத்தார்கள். ஆனால், அதில் நஞ்சு கலக்கப்பட்டதாகத் தமக்குத் தோன்றுகிறது எனக் கூறி அதை விழுங்குவதற்கு முன்பே துப்பி விட்டார்கள்.

ஸைனப் வரவழைக்கப்பட்டபோது, அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு இவ்வாறு கூறினார்: “நீங்கள் ஒரு சாதாரணப் பழங்குடித் தலைவர் மட்டுமே என்றால் உங்களைக் கொன்று விடலாம் என்றும், ஆனால் நீங்கள் ஒரு இறைத்தூதராக இருந்தால் நான் செய்ததை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்றும் நான் நினைத்தேன்.” மாநபி (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தார்கள். ஏனெனில் அது ஒரு தனிப்பட்ட விவகாரமாக இருந்தது. எனவே மன்னிக்கும் தமது உரிமையை அன்னார் மீண்டும் ஒருமுறை பயன்படுத்தினார் -கள். இச்செயல் அன்னாரது மன்னிக்கும் இயல்பை மீண்டும் வெளிப்படுத்திக் காட்டியது.

அன்னார் கடும் துன்புறுத்தலுக்கு ஆளானவர் ஆவார்கள். ஆனாலும், எப்போதும் அமைதிக்கும் நீதிக்குமே பாடுபட்டார்கள். மனிதகுலத்தின் மீதான அன்னாரது அக்கறை நிலையானதாக இருந்தது. மக்கள் இறைவனை நோக்கித் திரும்புவது எப்படி என்று அறிவதற்கு முன்பே, அவர்களுக்காக அன்னார் கண்ணீர் சிந்தினார்கள்.

அனஸ் இப்னு மாலிக் அறிவித்த ஒரு நம்பகமான ஹதீஸில், இவ்வாறு அறிவிக்கிறார்கள்: எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு கபரின் அருகே அழுது கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கடந்து சென்றார்கள். மற்றொரு அறிவிப்பின்படி, அப்பெண் தனது மகனின் மரணத்திற்காகத் துயரம் அனுசரித்துக் கொண்டிருந்தார். நபியவர்கள் அவரிடம் மென்மையாக, ‘அல்லாஹ்வுக்கு அஞ்சி, பொறுமையாக இருங்கள்.’ என்று அறிவுரை கூறினார்கள். துக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு, தம்முடன் பேசுபவர் யார் என்பதை அடையாளம் காணாமல், அவர் “என்னைத் தனியாக விட்டுவிடுங்கள்! எனக்கு ஏற்பட்டதைப் போன்ற ஒரு துன்பம் உங்களுக்கு ஏற்பட்டதில்லை” என்று பதிலளித்தார்.

தன்னிடம் பேசியவர் அல்லாஹ்வின் தூதர் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. பிறகு, யாரோ அவரிடம் ‘அவர்கள் நபி (ஸல்) ஆவார்கள்’ என்று தகவல் தெரிவித்தனர். என்ன நடந்தது என்பதை உணர்ந்ததும், அவர்

உடனடியாக நபியவர்களின் இல்லத்திற்குச் சென்றார். அன்னாரைச் சந்திப்பதிலிருந்து தடுக்கும் காவலர்களோ வாயில் காப்பாளர்களோ யாரும் அங்கு இல்லை என்பதை அவர் கண்டார். அவர் மன்னிப்புக் கேட்டு 'நான் உங்களை அடையாளம் கண்டு கொள்ளவில்லை' என்று கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர் கடுமையாகப் பேசியதற்காக அவரைக் கண்டிக்கவில்லை. மாறாக, அவர்கள் வெறுமனே இவ்வாறு பதிலளித்தார்கள்: "நிச்சயமாக, உண்மையான பொறுமை என்பது துன்பத்தின் முதல் அதிர்ச்சியில் (அல்லது முதல் தாக்கத்தில்) காட்டப்படுவதே ஆகும்."

அன்னார் தாராள மனமும் ஆன்மாவும் கொண்ட மனிதராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு தாராள குணம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை நான் கூற விரும்புகிறேன். ஒருமுறை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரு சட்டையை வாங்குவதற்காக எட்டு திர்ஹம்களுடன் சந்தைக்குச் சென்றார்கள். வழியில், ஒரு சிறுமி அழுது கொண்டிருப்பதைக் கண்டார்கள். மற்றவர்கள் அவளைக் கண்டு கொள்ளாமல் சென்ற போதிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வேலையே விட்டு விட்டு அவளது கண்ணீருக்கான காரணத்தை அறிந்து கொள்ள முன்வந்தார்கள். வீட்டுக்குத் தேவையான ஒரு பொருளை வாங்குவதற்காக இரண்டு திர்ஹம்களுடன் வந்ததாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவற்றை இழந்து விட்டதாகவும் அவள் விளக்கினாள். அவளது நிலையைக் கண்டு மிகவும் மனம் நெகிழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தன்னிடம் இருந்த எட்டு திர்ஹம்களில் இரண்டு திர்ஹம்களை அவளுக்கு வழங்கினார்கள்.

பின்னர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சந்தையை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அங்கு நான்கு திர்ஹம்களுக்கு ஒரு சட்டையை வாங்கினார்கள். அங்கிருந்து திரும்புவதற்கு முன், ஒரு முதியவர், "எவர் எனக்கு ஓர் ஆடையை அணிவிக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தின் ஆடைகளை அணிவிப்பானாக" என்று உரக்கக் கூறுவதை அன்னார் கண்டார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும், தமது அன்பாலும் தாராள குணத்தாலும் உந்தப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தாம் சற்று முன் வாங்கிய சட்டையை அந்த முதியவருக்கு வழங்கினார்கள்.

பின்னர், மீதமிருந்த இரண்டு திர்ஹம்களைக் கொண்டு மற்றொரு சட்டையை வாங்கிக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சந்தையிலிருந்து புறப்பட்டார்கள். அங்கிருந்து வெளியேறிச் செல்லும் வழியில், அங்கே அமர்ந்து அழுது கொண்டிருந்த ஓர் அடிமைப் பெண்ணை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முந்தைய காலத்தில், பெண்களுக்கு மிகக் குறைந்த அளவே மரியாதை அளிக்கப்பட்டது அல்லது எவ்வித மரியாதையும் அளிக்கப்படவில்லை. மேலும், அடிமைகள் நடத்தப்பட்ட விதம் கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கொடுமை -யானதாக இருந்தது. அவர்கள் பெரும்பாலும் அனைவராலும் புறக்கணிக்கப்பட்டனர். இருப்பினும், அந்தப் பெண் மிகுந்த மனவேதனையுடன் இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரிடம் சென்று அதற்கான காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு அவர், "நான் நீண்ட நேரம் வெளியே இருந்ததால், என் எஜமானரிடமிருந்து தண்டனை கிடைக்குமோ என்று அஞ்சுகிறேன்" என்று பதிலளித்தார். அப்பெண்ணுக்காக அவர்தம் எஜமானரிடம் பேசுவதாக உறுதியளித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு ஆறுதல் கூறினார்கள். அந்த வீட்டை அடைந்ததும், அன்னார் கதவைத் தட்டி, அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள். பின்னர், அந்த அடிமைப் பெண்ணுக்காக மன்னிப்பு கோரி எஜமானரிடமும் அவர் குடும்பத்தினரிடமும் பேசினார்கள். அவர்கள் அப்பெண்ணை மனமுவந்து மன்னித்தது மட்டுமல்லாமல், அவருக்கு விடுதலையையும் அளித்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமக்குப் பிடித்தமான ஆடையாக இருந்த தமது சட்டையை, மற்றொருவருக்கு உதவுவதற்காக எந்தத் தயக்கமும் இன்றி கொடுத்தார்கள். அவர்கள் ஒருபோதும் தேவைப்படுவோரின் அழைப்பைப் புறக்கணித்ததில்லை. மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக எதையும் தியாகம் செய்ய எப்போதும் தயாராக இருந்தார்கள். சமூகத்தால் பாகுபாட்டிற்கு ஆளாக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற் -காகவும் நபிகள் நாயகம் எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் தீவிரமாகப் போராடினார்கள். அடிமை முறையை ஒழித்த முதல் மார்க்கமாக இஸ்லாம் திகழ்ந்தது. அடிமைகளை வைத்திருப்பது ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையாக இருந்த அக்காலத்தில் இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு நடவடிக்கையாக அமைந்தது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்: "நாம் அவனுக்கு (நேர்வழி, வழிகேடு ஆகிய) இரண்டு வழிகளையும் அறிவித்து விட்டோம். ஆனால் அவன் சிகரத்தை அடைய முயலவில்லை. சிகரத்தை அடைதல் என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது யாது? (அது) அடிமையை விடுதலை செய்வதாகும்." (சூரா அல் பலத் 90:11-14)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறினார்கள்:

'கடந்த கால நபிமார்கள் அனைவரையும் நாம் நேர்மையுடனும் நீதியுடனும் ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்களில் மிகவும் வீரமிக்கவராகவும், வாழ்வின் அனைத்து நற்குணங்களையும் முழுமையாகக் கொண்டவராகவும், அல்லாஹ்வுக்கு மிகவும் நேசத்துக்குரியவராகவும் இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்கள் தனித்து நிற்பதைக் காண்கிறோம்.'

(ரூஹானீ கஸாயின் பாகம் 12 பக்கம் 82 சிராஜுல் முனீர்)

இக்கட்டளைகளின் அடிப்படையில், நபித்தோழர்கள் பலநூறு மற்றும் சில சமயங்களில் ஆயிரக்கணக்கான அடிமைகளை விடுதலை செய்தனர். பணிகளைச் செய்ய அடிமைகளை வைத்திருந்தவர்கள், அவர்களைத் தங்கள் சகோதரர்களைப் போலவே நடத்தவும், தங்களுக்கு அளிப்பதைப் போலவே அவர்களுக்கும் உணவும் உடையும் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டனர். இதன் விளைவாக, பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல அடிமைகள் இஸ்லாத்தின் செய்தியை ஏற்றுக் கொண்டனர். இவர்களில் பிலால் (ரலி) போன்ற அபிசீனியர்களும், சுஹைப் (ரலி) போன்ற ரோமானியர்களும் அடங்குவர். மேலும், ஜுபைர் (ரலி) மற்றும் சுஹைப் (ரலி) போன்ற கிறிஸ்தவர்களும், பிலால் (ரலி) மற்றும் அம்மார் (ரலி) போன்ற சிலையை வணங்குபவர்களும் இவர்களில் இருந்தனர்.

நிச்சயமாக, மிகவும் பிரபலமான மற்றும் குறிப்பிடத்தக்க வரலாறுகள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் கதையிலிருந்து கிடைக்கின்றன. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது, இஸ்லாத்தை வெளிப்படையாக அறிவித்த ஏழு பேரில் அவரும் ஒருவராக இருந்தார்கள். அவரது எஜமானர்கள் அவரைப் பிடித்து தரையில் கிடத்தி, அவர் மீது கற்களையும் மாட்டுத் தோலையும் வைத்து, ‘உன்னுடைய கடவுள்கள் லாத்தும் உஸ்ஸாவும்தான்’ (சிலைகளின் பெயர்கள்) என்று கூறினர். ஆனால், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களோ, ‘அஹத், அஹத்’ (இறைவன் ஒருவனே! இறைவன் ஒருவனே!) என்று மட்டுமே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரது எஜமானர்களிடம் சென்று, “இந்த மனிதரை நீங்கள் எவ்வளவு காலத்திற்குத் தான் துன்புறுத்தப் போகிறீர்கள்?” என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 280 திர்ஹம்களைச் செலுத்தி ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை விடுவித்தார்கள்.

அதன் பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்தச் சம்பவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விவரித்தார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “அபூபக்ரே! இந்த நற்செயலில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! நான் அவரை ஏற்கனவே விடுதலை செய்து விட்டேன்” என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுடன் சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். இஸ்லாத்தில் முதன்முதலாக பாங்கு சொன்னவராகவும் முதல் ‘முஅத்தின்’ என்ற பெருமையைப் பெற்றவரும் இவர்களே ஆவார்கள்.

இத்தகைய கண்ணியத்தைப் பெற்றவர் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மட்டுமே அல்ல. ஒவ்வோர் உயிரும் கண்ணியத்திற்குரியது என்பதே எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.

ஹஸ்ரத் யஸீத் பின் ஸாபித் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள்: “ஒருமுறை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தபோது ஒரு புதிய அடக்கஸ்தலத்தைக் கண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ‘இது என்ன?’ என்று கேட்டார்கள். “இது தாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மதிய வேளையில் இறந்துவிட்ட ஓர் அடிமைப் பெண்ணின் மண்ணறை ஆகும்” என்று சஹாபிகள் விளக்கினர். இதைக் கேட்டதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த அடக்கஸ்தலத்திற்குச் சென்று அவருக்காக ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் அன்னார், “நான் உங்கள் மத்தியில் இருக்கும் வரை, உங்களில் யாரேனும் இறந்து விட்டால் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஏனெனில் என்னுடைய தொழுகை இறந்தவருக்கு ஒரு கருணையாக அமைகிறது” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்தார்கள். மேலும், தங்களுக்குள் ஒருவரையொருவர் பாகுபடுத்திப் பார்க்கக் கூடாது என்று தங்கள் சஹாபிகளுக்கும் பின்பற்றுபவர்களுக்கும் தொடர்ந்து நினைவூட்டி வந்தார்கள். தங்களின் இறுதிப் பேருரையின்போது, எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் பின்வருமாறு தெளிவாகக் கூறினார்கள்: “அல்லாஹ் உங்களை ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆக்கியுள்ளான். எனவே, நீங்கள் பிரிந்து விடாதீர்கள். ஓர் அரேபியருக்கு அரேபியர் அல்லாதவர் மீதோ, அல்லது அரேபியர் அல்லாதவருக்கு அரேபியர் மீதோ எந்த மேன்மையும் இல்லை. அதே போல, வெள்ளையினத்தவருக்கு கறுப்பினத்தவரை விடவோ அல்லது கறுப்பினத்தவருக்கு வெள்ளையினத்தவரை விடவோ எந்த முன்னுரிமையும் இல்லை. நான் உங்களிடம் ஒன்றை விட்டுச் செல்கிறேன், அதை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டால், அது எல்லா தவறுகளிலிருந்தும் உங்களைப் பாதுகாக்கும். அதுவே அல்லாஹ்வின் வேதம் ஆகும்.”

எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள், தமது செயல்கள் நீதி, நேர்மை மற்றும் இறைப்பற்று ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் எனத் தங்கள் வாழ்நாள் முழுவதும் உறுதி செய்து கொண்டே இருந்தார்கள். இவ்வளவு அழகான ஒரு முன்மாதிரி நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாம் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். இன்று நமது வீடுகளில், நாம் பொறுமையைக் காட்டுகிறோமா அல்லது பொறுமையின்மையைக் காட்டுகிறோமா? நமது திருமண வாழ்வில், நாம் கருணையைக் காட்டுகிறோமா அல்லது புறக்கணிப்பைக் காட்டுகிறோமா? நமது பிள்ளைகளிடம், நாம் மார்க்கத்தின் மீது அன்பைத் தூண்டுகிறோமா அல்லது அதன் மீது அச்சத்தை உண்டாக்குகிறோமா? பிரச்சினைகளின் போது, நாம் மன்னிக்கிறோமா அல்லது காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொள்கிறோமா? நீதியின் விஷயத்தில், கடினமாக இருக்கும் போதும் நாம் உண்மைக்காக நிற்கிறோமா?

(தொடரும்...)

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்களது சொற்பொழிவுகளின் முக்கியத்துவம், அருள்கள் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ்வின் பொறுப்புகள்

❖❖❖ மதிப்பிற்குரிய டாக்டர் மன்ஸூரா அலாவுத்தீன் சாஹிபா (சதர் லஜ்னா இமாயில்லாஹ் பாரத்) ❖❖❖

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

கிலா.ஃ.பத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும், ஆன்மிக முன்னேற்றங்களுக்காகவும் ஒவ்வோர் அஹ்மதிக்-காகவும் இருக்கும் முதல் படிக்கட்டு, காலத்தின் கலீ.ஃ.பா அவர்களின் குரலை நேரடியாகக் கேட்பது ஆகும். அவர்களின் உதடுகளிலிருந்து, நாவிலிருந்து எப்போது என்ன வெளிப்படுகிறதோ அதை எப்போதும் தேடிக் கொண்டிருக்க வேண்டும். திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்ட ஜமாஅத்தின் பண்பாக سَمِعْنَا وَ اَطَعْنَا 'நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம்' என்ற சொற்களில் கூறப்பட்டுள்ளது. (2:286 காண்க). அவர்கள் எப்போதும் நன்மையான விஷயங்களை கவனமாகக் கேட்கின்றனர்; புரிகின்றனர்; நினைவில் வைக்கின்றனர். பிறகு அந்த விஷயங்களில் உள்ளத்தாலும், உயிராலும் செயல்படவும் செய்கின்றனர். எவர் செவிசாய்க்கவில்லையோ அவர் என்ன செயல்படுவார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; கேளுங்கள்; கட்டுப்படுங்கள் என்று அறிவுறுத்துகிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரையிலிருந்தும் இறையச்சத்தைப் பெறுவதற்கு இரண்டே பெரிய ஏணிகள்தான் இருக்கின்றன. அவை வழிகாட்டலைக் காது கொடுத்துக் கேட்பதும், அவற்றின்படி செயல்படுவதும்தான் எனத் தெரிகிறது.

உண்மையில் ஓர் உண்மையான அஹ்மதியின் அடிப்படையான பொறுப்பு, அவர் காலத்தின் கலீ.ஃ.பா அவர்களின் ஒவ்வொரு கட்டளையையும் கவனமாகக் கேட்பதாகும். ஏனெனில் இந்த பரிசுத்தமான குரல் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் நிலையை புரட்டிப் போட்டு விடுகிறது. (சரி செய்து விடுகிறது). அதில் அல்லாஹ்வின் ஆதரவுகள், அவனுடைய அருள்கள் மறைந்திருக்கின்றன. அதன்படி, காலத்தின் கலீ.ஃ.பா அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான கட்டளையினால் பேசுகிறார். அவற்றிலிருந்து இந்த உலகம் இழந்திருக்கின்ற, தேடுவதால் கிடைக்க முடியாத அத்தகைய இறைஞானங்கள் அவரது தூய நாவில் வெளிப்படுத்தப்படுகின்றன. அவர் குறித்த தேவைக்கும், இறை விருப்பத்திற்கும் ஏற்ப நம்பிக்கை கொண்டவர்களுக்கு செயல்படுமாறு அழைப்பு விடுக்கிறார். இவ்வாறு அந்தக் கட்டமைப்பை கலீ.ஃ.பாவாலேயே உருவாக்க முடியும். அதில் பிறகு திறமை எனும் செயல் உருவாக முடியும். எல்லா வகையிலும் ஆன்மிக முன்னேற்றங்களுக்கான வழிகள் காலத்தின் கலீ.ஃ.பாவின் வழிகாட்டல்களினாலேயே சரியான முறையில் கட்டமைக்க முடியும். எனவே காலத்தின் இறைஞானம் மிக்க குத்பாக்கள், சொற்பொழிவுகள்,



வகுப்புகள், தூதுச் செய்திகள் ஆகியவற்றை தொடர்ந்து நாமே கவனமாகக் கேட்பதும், குழந்தைகளுக்கு எடுத்துரைப்பதும், குடும்பத்தினருக்கு எடுத்துரைப்பதும், மற்ற நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சுற்று வட்டாரத்திலுள்ள சகோதரர்களுக்கும் ஆர்வமூட்டுவது ஒவ்வோர் அஹ்மதி ஆண், பெண்ணின் கடமையாகும். இவ்வாறு செய்வதாலேயே காலத்தின் கலீ.ஃ.பா அவர்கள் என்ன கூறுகிறார்கள்? நம்மிடமிருந்து என்ன விரும்புகிறார்கள்? நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் ஆகியவற்றை அறிய முடியும். எந்த அஹ்மதி அந்த கட்டளைகளையும், வழிகாட்டல்களையும் முறைப்படி கேட்பதில்லையோ அவர் முழுமையாக கட்டுப்படுவது என்ற நற்பேற்றிலிருந்து விலகியவராக இருக்கிறார். அது ஈருலகிலும் ஈடு செய்ய முடியாத இழப்பு என்ற நிலை வரை சென்றடையும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"நினைவில் கொள்ளுங்கள். இக்காலத்தில் அல்லாஹ்வின் வாக்குறுதிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தெளிவான கட்டளைகளின் ஒளியில் கிலா.ஃ.பத்துடன் இருக்கும் தொடர்பின் விளைவாகவே ஈமான் அளவிலான மற்றும் செயல் அளவிலான முன்னேற்றம் கிடைக்கும். ஒருவர் எவ்வளவுதான் பெரிய அறிஞராக இருந்தாலும், அல்லது திட்டம் தீட்டுபவராக இருந்தாலும் அல்லது வெளிப்படையில் ஏதாவது ஓர் ஆன்மிக அந்தஸ்தை அடைந்தவராக இருந்தாலும் அவரிடம் காலத்தின் கலீ.ஃ.பாவுடன் இருக்க வேண்டிய அத்தகைய தனிச் சிறப்பான தொடர்பு இல்லையென்றால், ஜமாஅத்தின் முன்னேற்றம் அல்லது ஒருவருடைய ஆன்மிக முன்னேற்றத்தில் அவருக்கு

அந்த அந்தஸ்தில் கடுகளவு கூட தாக்கம் இருப்பதில்லை. அல்லாஹ் அனைவருக்கும் இந்த விஷயத்தை அதன் ஆழம் வரை சென்று புரியக் கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக." (ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்கள் 2014-ஆம் ஆண்டு பாகிஸ்தான் ஷூரா உறுப்பினர்களின் பெயரில் அனுப்பிய தூதுச் செய்தி).

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பதுல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"எல்லாவற்றையும் விட மிகப் பெரிய செல்வம் குழந்தைகள் எனும் செல்வம் ஆகும். முழு வாழ்நாளின் வருவாயும் ஒரே நாளில் நீங்கள் இழந்து விட்டால், நீங்கள் எவ்வளவு துக்கத்தை உணர்வீர்கள்? ஆனால் பிள்ளைகள் எனும் செல்வத்தை விட அதிகமான செல்வம் உலகில் வேறு எதுவுமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். பிள்ளைகள் கையை விட்டுச் சென்று விட்டால், முழு வாழ்வின் செல்வமும் கையை விட்டுச் சென்று விட்டது. எனவே இது பற்றி கவலைப்படுங்கள்."

மேலும் இது தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீ∴பதுல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்:

"இது தொடர்பாக நான் உங்களுக்கு அறிவுரை கூறுவது என்னவென்றால், நீங்களும் தொடர்ந்து குத்பாக்களை கேட்டால், உங்கள் பிள்ளைகளுக்கும் புரிய



வைத்தால், (குத்பாக்களாகிய) அவற்றில் திருக்குர்ஆனைப் பற்றி கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய பண்புகள் பற்றிக் கூறப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து அறிவுரைகள் எடுத்து வைக்கப்படுகின்றன. எனவே இவை தர்பிய்யத்திற்கு நல்ல ஒரு காரணியாகும். மேலும் உங்களுடைய புதிய தலைமுறைக்கு திருக்குர்ஆன், மார்க்கம், முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஆழமான ஒரு தொடர்பு உருவாகி விடும் - இன்ஷா அல்லாஹ். இறைவனுடன் தொடர்பு உருவாகி விட்டால், பிறகு உலகவாதிகள் இதை கொஞ்சமும் சீர்குலைக்க முடியாது." ( ஜுமுஆ பேருரை 31.05.1991).

காலத்தின் கலீ∴பா அவர்கள் தமது ஜுமுஆ குத்பாக்களில் அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்து வைக்கிறார்கள். அவர்களின் அறிவுரை மற்ற எந்த அறிவுரையை விட ஆயிரக்கணக்கான மடங்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஜுமுஆ குத்பா உலகிலுள்ள எல்லா அஹ்மதிக்கும் வழிகாட்டாலுக்குக் காரணமாக மாறி அவரது வாழ்வில் ஒரு புரட்சியைக் கொண்டு வருகிறது. இதைப் பற்றித்தான் நமது அன்பிற்குரிய இமாம் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ் வரும் இந்த சொற்களில் கூறுகிறார்கள்: "ஒவ்வொரு குத்பாவும் ஒவ்வோர் அஹ்மதியை நோக்கி இருக்கிறது. அவர் உலகில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரியே! பல்வேறு நாடுகளிலிருந்து அஹ்மதிகள் அங்குள்ள உள்ளூர் அஹ்மதி-களிடமிருந்து, எங்களிடம் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கி விட்டன என்று மிக அதிகமாக கடிதங்கள் வரத் தொடங்கி விட்டன. சில நேரங்களில் தர்பிய்யத் சார்பான குத்பாக்கள் எப்படி இருக்கின்றன என்றால், குறிப்பாக எங்களின் நிலைமைகளைப் பார்த்து எங்களுக்காகக் கொடுக்கப்பட்டது போன்று இருக்கின்றன. இன்னும் கூறுவதென்றால், திருமணம் தொடர்பான சம்பிரதாயங்கள் பற்றி குத்பாக்கள் கொடுக்கப்-படும்போது, அந்த நேரத்திலும் இந்த சம்பிரதாயங்கள் எங்களையும் பீடித்திருக்கின்றன. மேலும் குத்பா ஏராளமான தர்பிய்யத்திற்கான வழிவகைகளை வழங்கி இருப்பதாக இருக்கிறது என்று கடிதங்கள் வருகின்றன. எனவே காலத்தின் கலீ∴பா அவர்களின் பேச்சைக் கேட்க வேண்டும்; அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்; நம்மை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற தேடலில் இருக்கின்ற அஹ்மதிகள், குத்பாவை ஆர்வத்துடன் கேட்பது மட்டுமின்றி, அந்த குத்பா தம்மை விளித்துக் கூறப்பட்டதாகவே கருதுகின்றனர்." (ஜுமுஆ பேருரை 23.04.2010)

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பலமுறை லஜ்னா இமாயில்லாஹ் அமைப்புக்கு குத்பாக்கள், சொற்பொழிவுகளைக் கேட்குமாறு குறிப்பாக கவனமூட்டி இருக்கிறார்கள். எனவே நாம் தொடர்ந்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களைக் கேட்பது நமது மிக முக்கியமான பொறுப்பு ஆகும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களை, சொற்பொழிவுகளைக் கேட்பதற்கான வழிமுறை என்னவென்றால், நாம் ஜுமுஆ பேருரையை அல்லது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவுகளை தொடங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்து விட வேண்டும். மேலும் முழு கவனத்துடனும், உள்ளத்தையும், சிந்தனையையும் சுறுசுறுப்பாக்கிக் கொண்டவாறு குத்பா அல்லது சொற்பொழிவைக் கேட்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் இன்னும் சிறப்பான வழிமுறை என்னவென்றால், நாம் நமது நாள் குறிப்பேட்டில் ஜுமுஆ பேருரை அல்லது சொற்பொழிவின் கருத்துகளை குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் கேட்டுவிட்ட பிறகு நாம் எந்த அளவுக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். எங்கு குறைபாடு இருகின்றதோ அங்கு செயல்பட முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் செயல்படுவதால்தான் அசல் நோக்கம் நிறைவேற முடியும்.

குத்பாக்கள், சொற்பொழிவுகள் பற்றி உங்கள் வீடுகளில் கலந்துரையாடல் செய்ய வேண்டும். பரஸ்பரம் உரையாடலைப் பகிர்வதால் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. ஒன்று, நமக்கும் அந்த விஷயங்கள் நினைவில் இருக்கும். ஏனெனில் நாம் செயேற்பதில் 20% நமக்கு நினைவில் இருக்கிறது. மேலும் எது பற்றி நாம் கலந்துரையாடல் செய்கின்றோமோ அதில் 70% நினைவில் இருக்கிறது என்பது பொதுவான விதியாகும். எனவே செயேற்ற பிறகு கலந்துரையாடல் செய்வதும் அவசியமாகும். இரண்டாவது நன்மை, நம் மூலமாக மற்றவர்களுக்கும் இந்த விஷயங்கள் சென்றடையும். இவ்வாறு நன்மையைப் பற்றி தெரிவிப்பவர் நன்மை செய்தவரைப் போன்றவர் ஆவார் என்ற ஹதீஸுக்கு ஏற்ப நாம் நன்மையை பிறருக்குத் தெரிவிக்கும்போது அதன்படி செயல்படுவராக நாம் ஆகி விடுவோம்.

பாகிஸ்தானில் 2018-ல் நடைபெற்ற மஜ்லிஸே ஷூரா எனும் ஆலோசனைக் கூட்டத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தனது தூதுச் செய்தியில், உங்களை நீங்கள் M.T.A-வுடன் இணையுங்கள்; குழந்தைகளின் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“கிலா.்.பத்துடன் தொடர்பு கொண்டிருப்பது ஜமாஅத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்கு மிகப் பெரிய வழியாகும். அதன் விளைவாக ஜமாஅத் சகோதரர்கள் காலத்தின் கலீ.்.பாவுக்கு எந்த அளவுக்கு நெருக்கம் ஆகி விட்டனர் என்றால், உள்ளம் அல்லாஹ்வின் புகழ்ச்சியால் நிரம்பி விடுகிறது. சமூக தீமைகள் பொதுவானவையாகி விட்ட இந்த நிலையில், மனிதனை மார்க்கத்திலிருந்து தொலைவில் கொண்டு செல்கின்ற அளவுக்கு பௌதிக உலகின் ஈடுபாடுகள் இருக்கின்ற நிலையில், அதிகமான மக்கள் மார்க்க, உலக முன்னேற்றதை அடைய வேண்டும் என்றுதான் நினைக்கின்றனர். ஆனால் அவர்கள் அதற்கான வழிவகைகளை இழந்தவர்களாக இருக்கின்றனர். இந்த நிலைகளில், உங்களின் காதுகளில் எல்லா நேரமும் நன்மையான விஷயங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன என்பது எவ்வளவு நற்பேறு பெற்ற மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். நீங்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டே காலத்தின் கலீ.்.பாவின் குத்பாக்கள், சொற்பொழிவுகளை பார்க்கவும், கேட்கவும் இயலும் வசதியை அல்லாஹ் வழங்கி இருக்கிறான். அல்லாஹ்வின் அருளால் உங்களில் பெரும்பான்மையினர் அவ்வாறு செயல்படுபவர்களாக இருக்கின்றனர். ஆனால் முழுமையாக செயல்படாத வீடுகளும் இருக்கும். எனவே எங்கெல்லாம் தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் சோம்பேறித்தனம், அல்லது பலவீனம் இருக்கிறதோ அதை விரைவாக அகற்றுங்கள். M.T.A-வைப் பார்ப்பதற்கு சிறப்பாகத் தூண்டுங்கள். லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் ஒவ்வோர் உறுப்பினரும் தன்னைத்தானே M.T.A-வுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து அதன் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும். குறைந்தபட்சம் எனது ஜுமுஆ குத்பா மற்றும் கலீ.்.பத்துல் மஸீஹின் மற்ற நிகழ்ச்சிகளைக் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அவர்களின் பிள்ளைகளும் அமர்ந்து இந்த நிகழ்ச்சிகளை கண்டிப்பாகப் பார்க்கின்றனர் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இது ஆன்மிக, நல்லொழுக்க தர்பிய்யத்திற்குக் காரணமாக அமையும். மார்க்கத்தைப் பற்றிய அவர்களின் அறிவு அதிகமாகும்; காலத்தின் கலீ.்.பாவுடன் உள்ள தொடர்பு இன்னும் உறுதியாகும்; தர்பிய்யத் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும்; கிலா.்.பத்துடன் இணைந்திருக்கும் மக்களின் அடிப்படை நிபந்தனையாகிய நல்ல செயல்களை செய்வதற்கான நல்வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும் - இன்ஷா அல்லாஹ்.”

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:




“அல்லாஹ் M.T.A எனும் அருளுக்குரிய அமைப்பை வழங்கியிருக்கிறான். அதன் விளைவாக நீங்கள் காலத்தின் கலீ.்.பாவின் குரலை நேரடியாகக் கேட்க முடியும். ஒவ்வொரு வாரமும் எனது குத்பா ஒளிபரப்பப்படுகிறது. அதை தொடர்ந்து கேட்டு வாருங்கள். அவ்வாறே லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் இஜ்திமாக்களில், ஜுமுஆ பேருரைகள், சொற்பொழிவுகளில் பெண்களுக்கும் எனது அறிவுரை கூறப்படுகிறது. காலத்தின் கலீ.்.பா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பிற்குரிய ஜமாஅத்துக்கு எந்த கோணத்தில் தர்பிய்யத் செய்ய விரும்புகிறார்; உங்களுடன் என்ன நம்பிக்கை வைக்கப்படுகிறது என்பது உங்களுக்கு எல்லா நேரமும் மனதில் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நீங்கள் அஹ்மதி பெண்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் பர்தாவை பேணுகின்றீர்களா? உங்களின் ஆடை நாணத்தைக் கொண்டதாக இருக்கிறதா? நீங்கள் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவதில் சிறப்பான ஏற்பாடு செய்கின்றீர்களா? நீங்கள் ஜமாஅத் பணிகளிலும், நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறீர்களா? நீங்கள் உண்மையான வகையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றீர்களா? தாய்மார்களாக இருந்தால் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் கொடுக்கிறீர்களா? அவர்களை ஜமாஅத்தின் பயனுள்ளவர்களாக ஆக்க முயற்சி செய்கின்றீர்களா? கல்லூரிகளில் படிக்கின்ற அஹ்மதி பெண்களும், பருவ வயதுள்ள பிள்ளைகளும் தமக்கென தனிச் சிறப்பை நிலைநாட்டுகின்றனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒளிமிக்க சிந்தனை என்ற பெயரில் அஹ்மதி பிள்ளைகளுக்கு அஹ்மதிகள், அஹ்மதி அல்லாதவர்கள் ஆகியோருக்கிடையில் வித்தியாசம் இல்லாத அளவிலான அப்படிப்பட்ட நிலை இருக்கக் கூடாது. எனவே நீங்கள் உங்களை ஆய்வு செய்து கொள்ளுங்கள். உங்களின்

சோம்பேறித்தனங்களையும், குறைபாடுகளையும் அகற்றுங்-கள். நீங்கள் கிலாஃபத்தின் அருள்கள், பயன்கள் ஆகியவற்றை உண்மையான முறையில் ஈர்க்கும் வகையில், உங்களின் சொல்லையும், செயலையும் காலத்தின் கலீஃபாவின் அறிவுரைகளுக்குக் கட்டுப்பட்டவாறு வையுங்கள்.”

அல்லாஹ் உங்களுக்கு இந்த அனைத்து அறிவுரை-களின்படி நடப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹாலாந்து நாட்டின் லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் உறுப்பினர்-களுக்கு 2022-ஆம் ஆண்டின் ஆண்டு இஜ்திமாவின்போது தனது தூதுச் செய்தியில் இவ்வாறு கூறினார்கள்:

“கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பது அவசியமானதாகும். ஏனெனில் இதில் நமது ஆன்மிக, பௌதிக முன்னேற்றங்கள் அடங்கியுள்ளன. எனவே ஒவ்வோர் அஹ்மதியும் இந்தத் தொடர்பை மிகவும் உறுதிப்படுத்து-வதற்காக எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். கிலாஃபத்துடன் தொடர்பு கொள்வதற்கு இன்றைய காலத்தில் அல்லாஹ்வின் அருளால் M.T.A என்ற ஒரு வழியையும் கொடுத்திருக்கிறான். நீங்களும் இந்த ஆன்மிக உணவுத் தட்டிலிருந்து பயன் பெறுங்கள் உங்கள் பிள்ளைகளையும் இதனுடன் இணைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பும் இதற்காக சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும். இதை செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்குங்கள். பொறுப்பாளர்கள் காலத்தின் கலீஃபா அவர்களுடன் தொடர்பு வைப்பதற்காக தொடர்ச்சியாக அறிவுரை கூறிக் கொண்டிருந்தால், சொற்பொழிவுகள், மாநாடுகள், மற்ற எல்லா நிகழ்ச்சிகளின் பக்கமும் கவனமூட்டிக் கொண்டிருந்தால், உங்களுக்கு கிலாஃபத்துடன் உள்ள தொடர்பு இன்னும் அதிகமாக உறுதியாகும் அதே நேரத்தில், தர்பிய்யத்தின் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்துக் கொண்டே செல்லும் - இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் காலத்தின் கலீஃபாவுடன் தொடர்பு வைப்பது பற்றி அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறியிருந்தார்கள்:

“(கிலாஃபத் ஆகிய) இதனுடன் எந்த அளவுக்கு அதிகமாக தொடர்பு வைப்பீர்களோ அதே அளவுக்கு உங்களின் பணிகளில் அருள் உருவாகும். மேலும் (கிலாஃபத் ஆகிய) இதிலிருந்து எந்த அளவுக்கு தொலைவில் இருப்பீர்களோ அதே அளவுக்கு உங்கள் பணிகளில் அருள் இல்லாத நிலைமை உருவாகும். எடுத்துக்காட்டாக, மரத்துடன் இருப்பவரே கனியைக் கொண்டு வர முடியும்; மரத்திலிருந்து வெட்டிய கிளை கனி தர முடியாது.” (கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் நூல் தொகுதி 3 பக்கம் 340)

எனவே நீங்கள் கிலாஃபத்தின் அருள்களிலிருந்து உரிய முறையில் பயன் பெறும் வகையில், அல்லாஹ்வின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் காலத்தின் கலீஃபா அவர்களின் கட்டளைகளின்படி செயல்பட்டவாறு ஆன்மிக முன்னேற்றங்களின் படிக்கட்டுகளை கடந்து செல்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

## வெளி வேஷம் ஒரு நோயாகும். அது மிகவும் மறைவாக இருக்கின்றது



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நன்மை செய்வதில் போதுமென்ற மனமும், சோம்பேறித்தனமும், பலவீனமும் இருக்கக் கூடாது. ஆனால், அத்துடன் அதில் வெளி வேஷம் இருக்கக் கூடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல மக்களும் தாம் செய்கின்ற பணிகளை வெளிப்படுத்திக் காட்ட விரும்புகின்றனர். அதாவது, அவர்கள் செய்யும் பணிகளைப் பலமுறை பாராட்டிக் கூற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இது ஒரு நோயாகும். அது மிகவும் மறைவாக இருக்கின்றது. அதற்கு மிகவும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன.....

பல அமைப்புகளும் தாம் செய்கின்ற பணிகளைப் பிறர் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளனர் என்று மக்கள் கூற வேண்டும் என்பதற்காக அவர்கள் தமது பணிகளைப் பெரிதாக விளம்பரப்படுத்திக் காட்டுகின்றனர். ஆனால், அவ்வாறு செய்பவர்கள் எதையும் செய்யவில்லை. மற்றவர்களைப் பணி செய்யத் தூண்டுவதற்-காகவும் ஆர்வமூட்டுவதற்காகவும் தமது பணிகளை வெளிப்படுத்திக் காட்டுவது வேறு விஷயமாகும். ஆனால், மற்றவர்களது நாவிலிருந்து அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளார்கள் என்று, அவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும் என்பதற்காக பணி செய்யக் கூடாது. எனவே, நம்பிக்கை கொண்டவர் வெளி வேஷத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். வெளி வேஷத்தினால் இறைவனின் நெருக்கம் கிடைக்காமல் போய் விடும்.’’

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 5 பக்கம் 526–527 அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 1 ஏப்ரல் 2016 பக்கம் 11)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



11

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### நான்காவது அத்தியாயம்

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

(அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன், அர்ரஹ்மானிர் ரஹீம், மாலிகி யவ்மித்தீன் ஆகிய வசனங்கள் தொடர்பான விளக்கவுரை

சுருக்கமாக, அருள், பேரருள் ஆகியவற்றிற்கு எஜமானன் ஆகிய இறைவனுடன் சிறப்பான தொடர்பு கொண்டதாக இருக்கும். இந்த இரண்டு பண்புகளில், பேரருள் செய்பவன் ஆகிய இறைவன் புறமிருந்து ஒரு மறைமுகமான உண்மையும், மறைமுகமான முன்னறிவிப்பும் இருக்கிறது. அது என்னவெனில், அல்லாஹ் இந்த இரண்டு பண்புகளையும் குறிப்பிட்டு, அவன் தனது தூதருக்கு இந்தப் பண்புகளின் உண்மைத்தன்மையைக் குறித்து விளக்க விரும்பினான். எனவே அவன் பலவிதமான ஆதரவுகளுடன் இந்தப் பண்புகளின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தினான்.

எனவே அவன் தனது நபிக்கும், அவர்களின் சஹாபிகளுக்கும் தானே, தர்பிய்யத் வழங்கினான். மேலும் அவன் அதிலிருந்து رَبُّ الْعَالَمِيْنَ (ரப்புல் ஆலமின் அனைத்துலகங்களையும் படைத்து பரிபாலிபவன்) ஆவான் என்பதை நிரூபித்தான். பின்னர் அவன், உழைப்பாளர்களின் எவ்வித உழைப்புமின்றித் தனது 'ரஹ்மானிய்யத்' மூலம் எந்த நற்செயல் புரிபவர்களின் நற்செயலுக்கும் காரணமாக அல்லாமல் தனது 'ரஹ்மானிய்யத்' (அளவற்ற அருள் பாலித்தல்) என்ற பண்பினால் மட்டும் அவர்களுக்குத் தனது அருட்கொடைகளை நிறைவேற்றினான். மேலும் இதன் மூலமாக அவன், اَرْحَمُ الرّٰحِمِيْنَ (அர்ஹமுர் ராஹிமீன் - கருணை புரிபவர்களிளெல்லாம் மிகவும் அதிக கருணை புரிபவன்) என்பதை நிரூபித்தான். பிறகு அவன் தனது கருணையால் அவர்களின் செயலின் சந்தர்ப்பத்தில் தனது உதவி எனும் பேரருள்களைக் காட்டினான். மேலும் தனது அருளால் رُوْحُ الْقُدُسِ (ரூஹுல் குத்ஸ் - பரிசுத்த ஆவி)-ஐக் கொண்டு அவர்களுக்கு ஆதரவளித்தான். மேலும் அவர்களுக்கு نَفْسٌ مُّطْمَئِنَّةٌ (ந.்.ப்ஸே முத்மயின்னா - நிம்மதியடைந்த ஆன்மா)வை வழங்கினான். மேலும் அவர்களுக்கு நிரந்தரமான மனநிம்மதியை இறக்கினான். பிறகு அவன் அவர்களுக்கு مَالِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன் - தீர்ப்பு நாளின் அதிபதி) என்பதன் முன்மாதிரியைக் காட்ட விரும்பினான். அப்போது அவன் அவர்களுக்கு அரசாட்சியையும், கிலா.்.பத்தையும் வழங்கினான். மேலும் அவர்களின் பகைவர்களை நாசமடைபவர்களுடன் சேர்த்து விட்டான். மறுப்பாளர்களை அழித்து விட்டான் அவர்களை வேரறுத்து விட்டான்.

பின்னர், திரும்ப உயிர்த்தெழுப்பப்படுவது என்ற முன்மாதிரியைக் காட்டினான். மேலும் அவர்களை மண்ணறைகளிலிருந்து வெளிக்கொணர்ந்தான். மேலும் அவர்கள் தனித்தனியாகவும், கூட்டம் கூட்டமாகவும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் இணைந்து விட்டனர். ஒவ்வொரு நபராக, கூட்டம் கூட்டமாக அதன் பக்கம் ஓடிச் சென்றனர். எனவே சஹாபிகள் (ரழியல்லாஹு அன்ஹும்) இறந்தவர் -களுக்கு வாழ்வு கொடுத்தனர். பஞ்ச காலத்திற்குப் பிறகு தொடர்ச்சியான மழை பொழிவதைக் கண்டனர். மேலும் இந்தக் காலத்திற்கு, يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன் - தீர்ப்பு நாள்) என்று பெயர் வைக்கப்பட்டது. ஏனெனில் அதில் உண்மை வெளிப்பட்டு விட்டது. மேலும் மறுப்பாளர்களின் படைகள் மார்க்கத்தில் இணைந்து விட்டன.

பிறகு தரத்தைப் பொருத்தவரை மார்க்கத்தின் இறுதியும், அதன் முதலில் இருந்ததைப் போன்று ஆக வேண்டும் என்பதற்காகவும், சென்ற கால உம்மத்துகளுடன் அவர்களின் ஒப்புமை முழுமையடைவதற்காகவும் இந்த உம்மத்தின் இறுதியிலும் இந்தப் பண்புகளின் முன்மாதிரியை அவன் காட்ட விரும்பினான்.

இந்த சூராவில், صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ (சிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம் - நீ அருட்கொடை புரிந்தவர்களின் வழியில் நடத்துவாயாக) என்ற கூற்றில் இதன் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (1:7 காண்க). எனவே இந்த வசனத்திலுள்ள சொற்களைப் பற்றி சிந்திப்பீராக.

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்திற்கு يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன்) என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அந்தக் காலத்தில் மார்க்கம் உயிரூட்டப்படும். மேலும் திட்டவட்டமான உறுதியுடன் மக்கள் ஏற்றுக் கொள்ளும் பொருட்டு அவர்கள் ஒன்று சேர்க்கப்படுவார்கள். அவன் எல்லா வகையான தர்பிய்யத்தின் மூலமாக நமது இந்தக் காலத்தைப் பராமரித்திருக்கிறான் என்பதில் எந்த

சந்தேகமோ, கருத்து வேறுபாடோ இல்லை. மேலும் அவன் சென்ற கால நபிமார்கள், ரஸுஉல்மார்கள், வலிமார்கள் (இறைநேசர்கள்), மற்றும் நண்பர்களுக்குக் காட்டியதைப் போன்றே, அவன் நமக்கு 'ரஹ்மானிய்யத்' மற்றும் 'ரஹீமிய்யத்' ஆகியவற்றின் அருள்களை மிக அதிகமாகக் காட்டினான்.

இந்த இரண்டு பண்புகளில் நான்காவது பண்பின் கருத்து, மன்னர் அல்லது எஜமானர் எனும் ஆடையில் நற்கூலி, தண்டனை கொடுப்பதற்காக يَوْمُ الْجَزَاء (யவ்முல் ஜஸா - நற்கூலி கொடுக்கும் நாள்) என்பதில் இருக்கும் இறைவனின் அந்த வலிமையான தோற்றமாகும். மேலும் அவன் அந்த வலிமையான தோற்றத்தை வாக்களிக்கப்பட்ட மஸீஹுஉக்கு மு.்.ஜிஸாவை (அற்புதத்தைப்) போன்று ஆக்கியிருக்கிறான். மேலும் அவன் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகிய) அவரை மறைமுகமான ஆதரவுகளுடனும், அடையாளங்களுடனும் حَكَمٌ (ஹகம் - நீதி வழங்குபவர்) ஆகவும், வானத்தின் அரசாட்சியின் தோற்றமாகவும் ஆக்கினான்.

இந்த உண்மைத்துவத்தை, أَنْعَمْتَ عَلَيْهِمْ (அன்அம்த்த அலைஹிம் - நீ அருட்கொடை புரிந்தவர்கள்) என்பதன் விளக்கவுரையின் நேரத்தில் நீர் அறிந்து கொள்வீர். மேலும் நான் கூறியிருப்பதெல்லாம் எனது மன விருப்பத்தின்படி கூறவில்லை. மாறாக, இந்த நுணுக்கமான கருத்துகள், எனக்கு என் இறைவனிடமிருந்து வழக்கங்கப்பட்டுள்ளன. எவர் இந்த நுட்பங்களைப் பற்றி முழுமையாக சிந்திப்பாரோ, இந்த அடையாளங்களைப் பற்றி சிந்திப்பாரோ அவர், அல்லாஹ் இதில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அருள்களுக்குரிய காலமாகிய அவருடைய இந்தக் காலத்தைப் பற்றி செய்தி தெரிவித்திருக்கின்றான் என்பதை அறிந்து கொள்வார். பிறகு அல்லாஹ்வின் இருப்பு எல்லா எல்லைகளை விட்டும் உயர்ந்ததாக இருக்கிறது என்ற போதிலும், இந்த வசனங்கள் அண்டசராசரங்களின் படைப்பாளனாகிய அல்லாஹ்வை அறிமுகப்படுத்தும் ஒரு வரையறையாக அமைந்திருக்கின்றன என்பதை நீர் அறிந்து கொள்வீராக.

ஈமான், நற்பேறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த போதனை மற்றும் பயன் மூலமாக ஷஹாதத் கலிமாவின் கருத்து தெளிவாகி விடுகிறது. இந்தப் பண்புகளின் காரணமாக, அல்லாஹ் கட்டுப்படுவதற்கு உரியவனாகவும், வணங்குவதற்கு தனிச் சிறப்பைக் கொண்டவனாகவும் ஆகி விடுகின்றான். ஏனெனில் அவன்தான் இந்த அருள்களை விருப்பத்துடன் இறக்குகிறான். ஏனெனில் நீங்கள் لَا إِلٰهَ إِلَّا اللّٰه (லா இலாஹ இல்லல்லாஹ் - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை) என்று கூறும்போது அறிவுள்ளவர்களின் பார்வையில் அதன் பொருள், அந்த உண்மையான வணக்கத்திற்குரியவனைத் தவிர ஆண்களிலும், பெண்களிலும் எவரையும் வணங்குவது ஆகுமானதல்ல. அவன் 'ரஹ்மானிய்யத்' மற்றும் 'ரஹீமிய்யத்' ஆகிய பண்புகளின் தொகுப்பு ஆவான். அவனைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்வது என்பது (மனிதனுக்கு) சாத்தியமில்லை. இந்த இரண்டு பண்புகளும் வணக்கங்களுக்குரியவனாக இருப்பவனுக்கு முதல் நிபந்தனை ஆகும்.

பிறகு அல்லாஹ் என்பது اِسْمٌ جَامِدٌ (இஸ்முன் ஜாமிதுன் - அதாவது மூலப்பெயர்) ஆகும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். அதன் உண்மையான சாரத்தை மனித அறிவால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. (அதாவது புலன்களின் மூலமாக அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது). ஏனெனில் அது அல்லாஹ்வின் தனிப்பட்ட (சொந்தப்) பெயர் ஆகும். அல்லாஹ் என்ற பெயர் مُشْتَقّ (முஷ்தக் - வேறு ஒரு சொல்லிலிருந்து உருவானது) ஆகும் என்று கூறப்படும் எதுவாயினும், அவை அனைத்தும் ஆதாரமற்ற, பொய்யான மற்றும் கற்பனையான கூற்றுகளின் வகையைச் சேர்ந்தவையாகும். ஏனெனில் படைப்பவனைப் பற்றிய ஆழம் என்பது சிந்தனைகளை விட மிக உயர்ந்ததும் அனுமானங்களை விட்டும் வெகு தொலைவில் உள்ளதும் ஆகும்.

நீங்கள், مُحَمَّدٌ رَّسُوْلُ الله (முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் - அல்லாஹ்வின் தூதராகிய முஹம்மது) என்று கூறும்போது, அதன் பொருள், முஹம்மது (ஸல்) அவர்கள் படைப்பாளனின் பண்புகளின் தோற்றமும், மேன்மைகளில் அவனுடைய பிரதிநிதியும், நிழல்தன்மையின் வட்டத்தை முழுமை செய்பவரும் காத்தமுர் ரிஸாலத்தும் (தூதுத்துவத்தின் முத்திரையும்) ஆவார்கள் என்பதாகும். மக்களில் சிறந்தவராகிய நம்முடைய நபி (ஸல்) அவர்கள் رَبُّ الْأَعْلٰى (ரப்புல் அ.்.லா - மிக உயர்ந்த இறைவன்) ஆகிய ரஹ்மான் மற்றும் ரஹீம் எனும் இரண்டு பண்புகளின் வாரிசாக இருக்கின்றார்கள். சுருக்கமாக, எனது அகப்பார்வையில் இருந்தும், கண்ணால் காண்பதிலிருந்தும் நான் அறிவது என்னவென்றால், எனது சென்ற விளக்கத்திலிருந்து நீங்கள் அறிந்து கொண்டதைப் போன்று, நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபி (ஸல்) அவர்களின் சஹாபா (ரலியல்லாஹுஉ அன்ஹுஉம்) முஹம்மதிய்யத்தின் கம்பீரமான உண்மைத்துவத்திற்கு வாரிசானார்கள். மேலும் அவர்களின் வாள் இணைவைப்பவர்களை வேரறுப்பதற்காக ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், படைப்புகளை வணங்குபவர்கள் அவர்களின் நினைவை மறக்க முடியாது. அவர்கள் முஹம்மதிய்யத் எனும் பண்பிற்கான உரிமையை நிறைவேற்றி விட்டனர். மேலும் அவர்கள் தமது போரின் சாதனைகளால் அதிகமானவர்களை நன்றாக சுவைக்க வைத்து விட்டனர்.

இதற்குப் பிறகு اَحْمَدِيَّت (அஹ்மதிய்யத்) என்ற பண்பு எஞ்சியிருக்கிறது. அது ஜமாலிய பண்புகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும், مُحِبِّيَّت (முஹிப்பிய்யத் - அன்பு கொண்டிருப்பது) எனும் நெருப்பில் உருகியவாறும் இருந்தது. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அஹ்மதிய்யத் எனும்) இந்தப் பண்புக்கு வாரிசானார். அவர் (முன்னேற்றத்தின்) வழிவகைள் முடிவுக்கு வந்து விட்ட, பகைவர்களின் கூர்மையான பற்களால் மார்க்கத்திற்கு அழிவை ஏற்படுத்துகின்ற, உதவியாளர்கள், நண்பர்கள் ஆகியோர் இல்லாமல் போய்விட்ட, எதிரிகள் மேலோங்கியிருக்கின்ற, ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்துகின்ற அத்தகைய காலத்தில் தோற்றுவிக்கப்பட்டார்.

இருண்ட இரவுகளுக்குப் பின்னர், இஸ்லாத்தின் ஆற்றலும், (முஸ்லிம்) அரசர்களைப் பற்றிய கம்பீரமும் அழிந்து விட்ட பின்னர், முஹம்மதிய்ய மார்க்கம் ஊனமுற்றவர்களைப் போன்று ஆகிவிட்ட பின்னர், அல்லாஹ்

தனது مٰلِكِ يَوْمِ الدِّيْنِ (மாலிகி யவ்மித்தீன்) என்ற முன்மாதிரியைக் காட்ட வேண்டும் என்பதற்காக (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகிய) அவர் தோற்றுவிக்கப்பட்டார். எனவே இன்று நமது மார்க்கம், நாட்டை இழந்தவர்களைப் போன்று ஆகி விட்டது. மேலும் ஆட்சி என்பது வானத்தில் அன்றி, வேறு எங்கேயும் எஞ்சியிருக்கவில்லை. (இக்காலத்தின்) பூமியிலிலுள்ளவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவருக்கு எதிராக பகைவர்களைப் போன்று எழுந்து நிற்கின்றனர்.

எனவே இந்த பலவீனமான நேரத்தில், கம்பீரமும் மகத்துவமும் முடிந்து விட்ட நேரத்தில், (ஆன்மிக தண்ணீரால்) பஞ்ச காலத்திற்குப் பிறகு பொழியும் மழையைப் போன்று நீர்ப்பாய்ச்சுவதற்காக (இறைவனின்) அடியார்களில் இருந்து ஓர் அடியார் நியமிக்கப்பட்டார். எனவே அவர்தான் இஸ்லாத்தின் பலவீனமான காலத்தில் வந்திருக்கின்ற அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார். மக்கள் (ஆன்மிக) மரணத்திற்குப் பிறகு கால்நடைகளைப் போன்று ஆகிவிட்டபோது அல்லாஹ் தனது அருளால் மட்டுமே ஒன்று சேர்க்கப்படுவது, மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுவது, நற்கூலி, தண்டனையின் நாள் ஆகியவற்றைப் பற்றிய முன்மாதிரியை காட்டுவதற்காக இவர் வந்திருக்கிறார். எனவே இதுவே يَوْمِ الدِّيْنِ (யவ்மித்தீன் - தீர்ப்பு நாள்) என்பதன் காலமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் கொஞ்ச காலத்திற்குப் பிறகே என்றாலும், நீங்கள் நிச்சயமாக நமது உண்மையை ஏற்றுக் கொள்வீர்கள்.

இங்கு ஒரு கஷ்ஃப் தொடர்பான நுண்ணிய கருத்து இருக்கிறது. அது இதற்கு முன்னர் ஒருபோதும் எடுத்துக் கூறப்படவில்லை. எனவே சகிப்புத்தன்மையுடன் செவிசாய்த்தவாறு கேளுங்கள். அது என்னவெனில், மரணத்திற்கு முன்னர் இவ்வுலகிலேயே அல்லாஹ் தனது (பண்புகளாகிய) இவற்றின் முன்மாதிரிகளைக் காட்டுவதற்காக அவன் இந்த இடத்தில் தனது நான்கு பண்புகளை மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளான். இதன் காரணமாவே அவன், لَهُ الْحَمْدُ فِي الْاُوْلٰى وَالْاٰخِرَةِ (லஹுல் ஹம்து ஃபில் ஊலா வல் ஆகிரா - துவக்கம், மறுமை ஆகிய இரண்டிலும் புகழ் அவனுக்கே உரியது) என்ற தனது (28:71) கூற்றில், இந்த முன்மாதிரி இஸ்லாத்தின் துவக்க காலத்தின் மக்களுக்காகவும், பின்னர் இழிவு என்பது, உம்மத்தின் ஆகரீன் (பின்னவர்) மக்களுக்கும் வழங்கப்படும் என்பதன் பக்கம் சுட்டிக்காட்டியிருக்கிறான்.

இவ்வாறே اَصْدَقُ الْقَآئِلِيْنَ (அஸ்தகுல் காயிலீன் - கூறுபவர் -களில் மிக்க உண்மையாளன்) ஆகிய அவன் இன்னோர் இடத்தில் ثُلَّةٌ مِّنَ الْاَوَّلِيْنَ وَ ثُلَّةٌ مِّنَ الْاٰخِرِيْنَ (ஸுல்லதும் மினல் அவ்வலீன வ ஸுல்லதும் மினல் ஆகரீன்) என்று கூறினான். (பொருள்: முன்னவர்களைச் சேர்ந்த ஒரு பெரும் ஜமாஅத்தும், பின்னவர் -களைச் சேர்ந்த ஒரு பெரும் ஜமாஅத்தும் இருக்கிறது. 58:40,41-ல் வருகிறது). எனவே இவ்வாறு அவன் நேர்வழி, உதவி, ஒத்தாசை ஆகியவற்றின் காலத்தை நம்முடைய நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கும், இந்த உம்மத்தின் மஸீஹின் காலமாகிய இறுதி காலத்திற்கும் பங்கிட்டுள்ளான். மேலும் அவ்வாறே, وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ (வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் - அதாவது அவர்களிலிருந்தே இன்னும் அவர்களை சந்திக்காத மற்றவர்களிடமும் அவரை எழுப்ப இருக்கிறான்) என்று கூறினான். (62:4 காண்க). இதில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், அவர்களுடைய ஜமாஅத் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் ஆகியோரின் பக்கம் சுட்டிக்காட்டி இருக்கிறான்.

எனவே முதலில் இந்தப் பண்புகள் நம்முடைய நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் வெளிப்பட்டன. பின்னர் இவை இறுதிக் காலத்திலும் வெளிப்படும் என்பது திருக்குர்ஆனின் இந்த தெளிவான வசனங்களிலிருந்து நிரூபணமாகின்றது. மேலும் இது தீமையும், குழப்பமும் மிகவும் அதிகமாக இருக்கும் அந்த காலம் ஆகும். மேலும் நன்மை, நேர்மை ஆகியவை மிகவும் குறைவாக இருக்கும். மரம் வேரோடு அறுக்கப்படுவது போன்று இஸ்லாம் வேரறுக்கப்படும். மேலும் இஸ்லாத்தின் நிலை பாம்பால் கடிக்கப்பட்டது போன்று இருக்கும். மேலும் முஸ்லிம்கள் இறந்தவர்களைப் போன்று ஆகி விடுவார்கள். மேலும் அவர்களின் மார்க்கம் பயங்கரமான விபத்துகள், தொடர்ச்சியாக இறங்கும் மற்ற துன்பங்களின் கீழ் நசுக்கப்படும். மேலும் இந்த நிலைமையையே நீங்கள் இந்த காலத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் பலவிதமான தீமை, நிராகரிப்பு, இணைவைத்தல், கிளர்ச்சிகள் ஆகியவற்றை நீங்கள் கண்டு கொண்டிருக்கிறீர்கள். குழப்பம் செய்பவர்கள் எவ்வாறு அதிகமாகி விட்டனர் என்பதையும், சீர்திருத்தம் செய்பவர்கள், சுக, துக்கங்களில் பங்கு கொள்பவர்கள் குறைந்து விட்டனர் என்பதையும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஷரீஅத் இல்லாமற்போய் விட்டதற்கும், மார்க்கம் பலவீனமடைந்து விட்டதற்குமான காலம் நெருங்கி விட்டது. இது திடீரென்று வந்து விழுந்து விட்ட துன்பம் ஆகும். மேலும் திடீரென ஏற்பட்டு விட்ட தீங்கு ஆகும். மேலும் அரபு மக்களையும், அரபு மக்கள் அல்லாதவர்களையும் எரித்து விட்ட நெருப்பாகும்.

அவ்வாறு இருந்த போதிலும், நமது இந்தக் காலம் ஜிஹாதுக்கான (போர் செய்வதற்கான) காலமும் அல்ல. அம்புகள், வாள்களுக்கான காலமும் அல்ல. மேலும் இது கழுத்துளை வெட்டுவதற்கான, சங்கிலிகளால் பிணைக்கப் -படுகின்ற காலமும் அல்ல. மேலும் வழிகெட்டவர்களை சங்கிலிகளிலும், கழுத்துப்பட்டைகளிலும் பிணைத்து அவர்களை இழுத்துச் செல்வது, அவர்களை கொலை செய்வது, நாசமாக்குவது ஆகிய கட்டளைகளை இடுகின்ற காலமும் அல்ல. இந்தக் காலம் மறுப்பாளர்கள் மேலோங்குவதற்கான, முன்னேற்றத்திற்கான காலமாகும். முஸ்லிம்களுக்கு அவர்களின் செயல்களின் காரணமாக இழிவு விதிக்கப்பட்டுள்ளது. தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் ஆகியவற்றிலிருந்தோ, தூய்மையிலிருந்தோ, தக்வாவை மேற்கொள்வதிலிருந்தோ எவரும் தடைசெய்யப் -படாதிருக்கும் நிலையில், ஜிஹாது எவ்வாறு ஆகுமானதாகும் என்று கூறுங்கள். மேலும் எந்த மறுப்பாளரும் முஸ்லிம்களை மார்க்கத்திலிருந்து விலக்குவதற்கு அல்லது அவர்களை துண்டு துண்டாக்குவதற்கு வாளை ஏந்தவில்லை.

மேலும் வாளுக்கு எதிராகவே வாள் ஏந்தப்பட வேண்டும்; எழுதுகோல்களுக்கு எதிராக எழுதுகோல்கள் ஏந்தப்பட வேண்டும் என்பதே நீதியாகும். வாள் மற்றும் ஈட்டியின் (மூலமாக நமக்கு ஏற்படும்) காயங்களினால் நாம்

அழுவதில்லை. நாவுகளால் இட்டுக்கட்டிக் கூறுபவர்களால் நாம் அழுகின்றோம். பொய்ப் பேச்சுகளால் அல்லாஹ்வின் நெறிநூல்கள் பொய்ப்படுத்தப்பட்டன. மேலும் அவற்றின் இரகசியங்கள் மறைக்கப்பட்டன. மார்க்கத்தின் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் அதன் இல்லம் தரைமட்டமாக்கப்பட்டது.

எனவே இது தனது விளைச்சல்கள் வெட்டப்பட்ட நகரத்தைப் போன்று ஆகி விட்டது. அல்லது அதன் மரங்கள் எரிக்கப்பட்ட தோட்டத்தைப் போன்று ஆகி விட்டது. அல்லது அது, மலர்களும், கனிகளும் முற்றிலும் நாசமாக்கப்பட்ட தோட்டத்தைப் போன்று ஆகி விட்டது. மேலும் அதன் மொட்டுகள் பறிக்கப்பட்டது போன்று ஆகி விட்டது. அல்லது அது, வளமான நிலமாக இருந்தும் அதன் ஆறுகள் வற்றிப்போன ஒரு ஊரைப் போன்று மாறிவிட்டது. அல்லது அவற்றின் அடையாளங்கள் கூட அழிக்கப்பட்டு விட்டதைப் போன்ற உறுதியான மாளிகைகளைப் போன்று ஆகி விட்டன. மேலும் அதைச் சிதைப்பவர்கள் அதை துண்டு துண்டாக சிதைத்து விட்டனர். மேலும் (இஸ்லாம் மார்க்கம் ஆகிய) அது அழிந்து விட்டது என்று கூறப்பட்டது. மேலும் மரணத்திற்கான செய்தியை கொண்டு வருபவர்கள் அதன் மரணத்திற்கான செய்தியைக் கொண்டு வந்தனர். அதன் மரணத்தைப் பற்றிய செய்திகள் அச்சிடப்பட்டன. மேலும் வெளியிடுபவர்கள் அவற்றை நன்றாகப் பரப்பி விட்டனர்.

وَالَّيْلِ اِذَا عَسْعَسَ وَالصُّبْحِ اِذَا تَنَفَّسَ (வல்லைலி இஸா அஸ்அஸ வஸ்ஸுப்ஹி இஸா தன.்.ப்.்.பஸ - வருகின்ற மற்றும் புற முதுகு காட்டிச் செல்கின்ற இரவின் மீது ஆணையாக! மேலும் மூச்சு விடத் தொடங்கும் விடியற்காலையின் மீது ஆணையாக!) என்று அல்லாஹ் கூறுவதைப் போன்று, (81:18,19 காண்க) ஒவ்வொரு முழுமைக்கும் ஒரு சரிவு இருக்கிறது. ஒவ்வோர் இளமைக்கும் சறுக்கல் இருக்கிறது. வெள்ளத்தின் நீர் உறுதியான மலை வரை சென்றடைந்து விடும்போது அது அங்கு நின்று விடுவதையும், இரவு ஒளிமிக்க பகலை வந்தடைந்து விடும்போது, இருள் நீங்கி விடுவதையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். எனவே அவன் இரவின் மிக அதிக இருள்களுக்குப் பிறகு விடியற்காலையின் விடியலை ஒரு கட்டாயமானதாக ஆக்கியிருக்கிறான். அவ்வாறே, يَاَرْضُ ابْلَعِيْ (யா அர்ழுப்லயீ - பூமியே! நீ இப்போது உன் தண்ணீரை விழுங்கி விடு என்ற அல்லாஹ்வின் (11:45) கூற்றில் வெள்ளத்தின் உச்சக்கட்டத்தை வெள்ளத்தின் வீழ்ச்சியின் அடையாளமாக ஆக்கி இருக்கிறான். எனவே அல்லாஹ், நம்பிக்கை கொண்டவர்களின் பக்கம் அவர்களின் முந்தைய நாளை திருப்பவும், அவன் அவர்களின் இறைவன் ஆவான் அவன் 'ரஹ்மான்' ஆவான் 'ரஹீம்' ஆவான் நற்கூலி, தண்டனை வழங்கப்படும் நாளின் அதிபதி ஆவான் என்பதை அவர்களுக்குக் காட்டவும் அவன் விரும்புகிறான். அந்த நாளில் இறந்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். நீங்கள் இந்தக் காலத்தில் பேரருள் புரியும் இறைவனின் 'ருபூபிய்யத்' (படைத்துப் பரிபாலிப்பது) என்பதையும், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் உடல்களுடன் தொடர்புடைய அவனது 'ரஹ்மானிய்யத்' (சுயமாக அருள்பாலிப்பது) என்பதையும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

அவன் எவ்வாறு புத்தம் புதிய வழிவகைகளையும், பயனுள்ள காரணிகளையும் உருவாக்கியிருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். இத்தகைய தொழில் நுட்பங்களின் எடுத்துக்காட்டு சென்ற காலங்களில் பார்க்கப் -படவில்லை. முந்தைய நூற்றாண்டுகளில் காணப்படாத அத்தகைய அற்புதங்களை அவன் இக்காலத்தில் படைத்திருக்கிறான். மேலும் உங்களுக்கு பயணி, தங்கி இருப்பவர்; நகரத்தில் வாழ்பவர், அயல் நாட்டில் வாழ்பவர், உடல் நலமுள்ளவர், அல்லது நோயாளி, போரிடுபவர், சமாதானம் செய்து கொள்பவர், நிலைபெற்றிருக்கின்றவர், சென்று கொண்டிருக்கின்ற நிலையில் இருப்பவர் ஆகிய எல்லா வகையான அருள்களுடனும், கடினங்களுடனும் தொடர்புள்ள அனைத்திலும் நீங்கள் புதிய மாற்றத்தையும் புதுமையையும் காண்பீர்கள். உலகம் முற்றிலுமாக மாறி விட்டது போன்று இருக்கும்.

இவை அனைத்தும் رَبُوْبِيَّةٌ عُظْمٰى (ருபூபிய்யதே உஸ்மா - மிக்க மகத்தான முறையில் படைத்து காத்தோம்புவது) மற்றும் رَحِيْمِيَّةٌ كُبْرٰى (ரஹீமிய்யத்தே குப்ரா - மிகப் பெரிய முறையில் அருள்பாலிப்பது) ஆகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவ்வாறே உங்களுக்கு எல்லா உலக விஷயங்களிலும் இறைவனின் 'ருபூபிய்யத்' (படைத்துப் பரிபாலிப்பது), 'ரஹ்மானிய்யத்' (சுயமாக அருள்பாலிப்பது) 'ரஹீமிய்யத்' (நற்செயலுக்கேற்ற நற்கூலி வழங்குவது) ஆகியவை தென்படும். இறைவனைப் பற்றிய ஞானங்களைத் தேடுபவர்களுக்கு ஒவ்வொரு விவகாரமும் எளிதாக்கப் -பட்டுள்ளது. தப்லீகின் பணி, ஆன்மிக ஞானங்களை வெளியிடும் பணி எளிதாக்கப்பட்டுள்ளது. மேலும் அல்லாஹ்வை வணங்குகின்ற, அவனிடமிருந்து மன அமைதியை வேண்டுகின்ற ஒவ்வொருவருக்கும் அடையாளங்கள் இறக்கப்பட்டுள்ளன. ரமலானில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் கிரகணம் ஏற்பட்டு விட்டது. ஒட்டகங்கள் கைவிடப்பட்டுள்ளன. அவை இப்போது மிக அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நீங்கள் சீக்கிரமே மக்கா, மதீனாவின் பாதையில் புதிய வாகனத்தை செல்லக் காண்பீர்கள். ஆலிம்களுக்கும், மாணவர்களுக்கும் நூல்கள் மற்றும் அறிந்து கொள்வதற்கு ஏதுவான எல்லா வகையான ஊடகங்களின் உதவிகள் அதிகமான முறையில் செய்யப்பட்டுள்ளன. பள்ளிவாயில்கள் நிரம்பி விட்டன. மேலும் வணங்குபவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். அமைதி, பாதுகாப்பு, தப்லீக் (மார்க்கக் கொள்கை பரப்பு) ஆகியவற்றின் வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் இவையெல்லாம் 'ரஹீமிய்யத்' (நற்செயலுக்கேற்ற நற்கூலி வழங்குவது) என்பதன் அருள் ஆகும்.

(தொடரும்...)

நமது இந்தக் காலம் ஜிஹாதுக்கான (போர் செய்வதற்கான) காலமும் அல்ல. அம்புகள், வாள்களுக்கான காலமும் அல்ல.............. தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் ஆகியவற்றிலிருந்தோ, தூய்மையிலிருந்தோ, தக்வாவை மேற்கொள்வதிலிருந்தோ எவரும் தடைசெய்யப்படாதிருக்கும் நிலையில், ஜிஹாது எவ்வாறு ஆகுமானதாகும் என்று கூறுங்கள். மேலும் எந்த மறுப்பாளரும் முஸ்லிம்களை மார்க்கத்திலிருந்து விலக்குவதற்கு அல்லது அவர்களை துண்டு துண்டாக்குவதற்கு வாளை ஏந்தவில்லை.

# பராஹீனே அஹ்மதிய்யா

பாகம் 2
தொகுதி 1

ஆங்கிலப் பதிப்பிலிருந்து
தமிழாக்கம்:
ஜோதி அருள்குமார்
ஆஸ்டின்

## முன்னுரை

### சில முக்கியமான விஷயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

முதலாவதாக, மிகுந்த கண்ணியத்துடனும் பணிவுடனும் பிற மார்க்கங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்களுக்கு நான் உறுதிப்படத் தெரிவிப்பது யாதெனில், யார் ஒருவருடைய மனதையும் புண்படுத்துவதோ அல்லது தேவையற்ற பிரச்சனைகளைத் தூண்டுவதோ, இந்நூலை நான் எழுதுவதற்கான நோக்கமல்ல. எனது முழுமையான கவலையும் இதயபூர்வமான ஆவலும் யாதெனில் உண்மையையும் நேர்மையையும் விளக்கிக் காட்டி அவற்றை எல்லாரும் காணும்படியாக வெளிப்படையாக எடுத்து வைப்பது மட்டுமே. எனது விசுவாசத்தை மட்டுமே பற்றிக் கொண்டு நமது எதிரிகளின் நம்பிக்கைகளைப் பற்றி விவாதிக்காமல் இருந்து விடுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம்தான். இருந்தபோதிலும், பிரச்சனை யாதெனில், உண்மைக்கு எதிரான பிற நம்பிக்கைகளின் தவறுகளைச் சுட்டிக் காட்டாமல், உண்மைக் கோட்பாடுகள் மற்றும் வாதங்களைப் பற்றிய தீர்க்கமான ஆய்வும் முழுமையான விவாதமும் சாத்தியம் இல்லை. எனவே எனக்கு அவற்றைப் பற்றிக் குறிப்பிடுவதும் அவற்றால் உருவாகியுள்ள ஐயங்களைக் களைவதையும் தவிர வேறு வழி இல்லை. எதிர்ப்பாளர்களின் எதிர்ப்புகளுக்கு சரியான பதில் அளிக்காமல் உண்மைகளை நிலைநாட்ட இயலாது என்பது தெளிவு. உதாரணமாக, படைப்பாளி ஒருவன் இருக்கின்றான் என்பது வாதப்பொருள் ஆகும்போது தகுந்த முறையில் இறை மறுப்போரின் தவறான நம்பிக்கைகளைக் களையாமல் இருந்தால் அவ்வாதம் நிறைவடையாது. இதைப் போலவே இறைவனை, ஆன்மாக்கள் மற்றும் உடல்களைப் படைப்பவன் என்று நாம் வாதம் செய்யும் போது இறைவனின் படைப்பாற்றலை எதிர்க்கும் ஆரிய சமாஜிகளின் தவறான கோட்பாடுகளை நாம் மறுக்க வேண்டிய தேவை எழுகின்றது. மேலும் இறைவெளிப்-பாட்டின் தேவை பற்றிய வாதங்களை நாம் முன்வைக்கும்போது பிரம்மசமாஜியினர் எழுப்பும் அச்சங்களையும் போக்க வேண்டியது அவசியமாகிறது.

இவை அன்றி, அனுபவத்தின் மூலம் நாம் திடமாக அறிந்து கொண்ட விஷயமாவது, அறிவுப்பூர்வமற்ற தவறான இயல்பைக் கொண்ட அவர்களின் மார்க்கக் கோட்பாடுகளை, இன்றைய மார்க்க எதிர்ப்பாளர்கள் புரிந்து கொள்ளும்படி செய்யாத வரை, அவர்கள் இஸ்லாத்தின் உண்மைகளைப் பற்றி தெரிந்து கொள்ள எத்தனை பிரகாசமாக அவர்கள் மீது ஒளி வீசினும், அவர்கள் காது கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நாம் மற்றவர்-களின் மார்க்கக் கோட்பாடுகளைக் குறித்து தெளிவாக விளக்கி, அவர்களின் ஐயங்களைக் களைந்து, அவர்களின் தவறான நம்பிக்கைகளை வெளிப்படுத்தி, இவ்விதமாக ஒரு முழுமையான ஆய்வை மேற்கொள்வது அனுமதிக்கப்பட்டது மட்டும் அல்லாது உண்மை, நேர்மை மற்றும் அனுதாபத்தின் அடிப்படையிலும் தேவையாகும்.

நேரான பாதையில் இருந்து அவர்கள் விலகி விட்டதை நாம் உண்மையிலேயே காணும்போது, அவர்களது கோட்பாடுகள் உண்மைக்குப் புறம்பானதாக இருப்பதாக நாம் அறியும்போது, தவறான நம்பிக்கைகளோடு, இந்த தற்காலிகமான உலகை விட்டு அவர்கள் பிரியும்போது, அவர்களுக்கு மிகப்பெரிய தண்டனை கிடைக்கும் என நம்புவதாலேயே அவர்களை சீர்திருத்துவது எனும் கடமையில் இருந்தும் நாம் விலகிக் கொள்ள இயலாது. மேலும் அவர்களது தவறான நம்பிக்கைகளையும் அதனால் மற்றவர்களைத் தவறாக வழிநடத்தப்படும்படியான அவர்களது முயற்சிகளையும் நாம் நித்தம் கண்டும் காணாதது போல் இருக்க இயலாது. இல்லையெனில், எவ்வாறு நாம் உண்மையான மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூற இயலும்? மேலும் தமது இறைவனின் முன் நாம் எவ்வாறு நம்மை விடுவித்துக் கொள்ள இயலும்?

இறைவன் குறித்தோ சத்திய மார்க்கம் குறித்தோ எந்த ஒரு கவனமும் இல்லாத உலகத்தார்கள், எனது கூற்றுக்களைத் தவறாக எடுத்துக் கொள்ள இயலும். மேலும் இஸ்லாத்தின் மேன்மைகளையும் அவர்களின் மார்க்கங்களின் குறைபாடுகளையும் எடுத்து வைப்பதின் நிமித்தம் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக என் மீது வீண் பழி சுமத்தக் கூடும். இருந்தபோதிலும், இந்நூலின் மூலம் நேர்வழியைத் தேடும் பலர் நேரிய பாதையைக் கண்டு, இறைவன் முன்பு நன்றியுடன் பணிந்து கொள்வார்கள், மேலும்

இறைவன் அவர்களை நெருங்கி எனக்குக் கற்றுக் கொடுத்த, எனக்கு வெளிப்படுத்திய விஷயங்களை அவர்களுக்கும் வெளிப்படுத்துவான் என்பது எனது நம்பிக்கையாகும். உண்மையில் அவர்களுக்காகவே இந்நூலை நான் எழுதியுள்ளேன். மேலும் அவர்களுக்காகவே இந்த பெரிய பாரத்தை நான் சுமக்கின்றேன். எனது நாவினாலோ எனது எழுதுகோலினாலோ தெரிவிக்க முடிந்த அளவிற்கு அதிகமான நல்லெண்ணமும் அக்கறையும் அவர்கள் மீது எனக்கு இருக்கின்றது.

بدل دردے کہ دارم از برائے طالبان حق نمے گردد بیاں آں درد از تقریر کوتاہم

உண்மையைத் தேடுபவர்களின் நிமித்தம் என் இதயத்தில் நான் கொண்டுள்ள வேதனையை எனது சொற்ப வாக்கியங்களில் விவரித்து விட இயலாது.

دل و جانم چناں مستغرق اندر فکر اوشان ست کہ نے از دل خبر دارم نہ از جان خود آگاہم

என் இதயமும் ஆன்மாவும் அவர்கள் குறித்த கவலையில் ஆழ்ந்துள்ளது. அதன் நிமித்தம் என் இதயத்தைக் குறித்து நான் அக்கறைப்படவில்லை. எனது வாழ்வைக் குறித்தும் நான் கவலையற்று உள்ளேன்.

بدیں شادم کہ غم از بہر مخلوقِ خدا دارم ازیں درلذتم کز دردے خیزد زدل آہم

இருந்த போதிலும் இறைவனின் படைப்பினங்களுக்கு நன்மையை நாடுவதனால் நான் மகிழ்ச்சியாக உள்ளேன். எனது வலியில் நான் கதறுவது எனக்கு மகிழ்ச்சியின் ஊற்றாக இருக்கின்றது.

مرا مقصود و مطلوب و تمنا خدمت خلق است ہمیں کارم ہمیں بارم ہمیں رسمم ہمیں راہم

எனது நோக்கம், ஏக்கம் மற்றும் எனது இதயப்பூர்வமான ஆவல் மனிதகுலத்திற்கு சேவை ஆற்றுவது ஆகும். இதுவே என் வேலை. இதுவே என் மார்க்கம் மற்றும் இதுவே என் பழக்கம் மற்றும் இதுவே என் வாழ்வியல் முறையாகும்.

نہ من از خود نہم در کوچۂ پند و نصیحت پا کہ ہمدردی برد آنجا بہ جبر و زور و اکراہم

மக்களுக்கு நற்போதனை வழங்கக்கூடிய நல்ல ஆலோசனை வழங்கக்கூடிய இந்தப் பணியை நான் சுயமாக எனது சித்தத்தின்படி முயலவில்லை. மனிதகுலத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணமே என்னை முன்னால் இழுக்கின்றது.

غم خلق خدا صرف از زباں خوردن چہ کارست ایں گرش صد جاں بہ پا ریزم ہنوزش عذر میخواہم

மனிதகுலத்தின் மீதான உண்மையான அனுதாபம் எனும்போது வெறும் வார்த்தைகள் என்ன பயன் அளித்து விடக்கூடும்? நான் நூறு முறை எனது வாழ்வைப் பகரமாக அளித்தாலும் அது போதுமானதாக இருக்காது. என்றும் மன்னிப்பையே நாடுபவனாக நான் உணர்வேன்.

چو شام پر غبار و تیرہ حال عالمے بینم خدا بروے فرود آرد دعا ہائے سحرگاہم

இருள் சூழ்ந்துள்ள இவ்வுலகத்தை நான் காணும்பொழுது என் இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். ஆழிய பின் இரவு நேரங்களின் எனது பிரார்த்தனைகளை இறைவன் அருள்வானாக.

உண்மையும் நேர்மையும் உள்ள எல்லா மக்களுக்கும், அவர்கள் மீது நன்மையை நாடுபவனாக. அவர்கள் மீது அனுதாபம் உள்ளோனுமாக. நான் பணிவுடன் முன்வைக்கும் கோரிக்கை யாதெனில், அவர்கள் எவ்வாறு தங்களுடைய ஒரு நண்பனின் ஆலோசனைகளுக்கு கவனம் செலுத்துவார்களோ அதே போன்று இந்த நண்பனின் நூலிற்கும் முழு கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறு தங்கள் நண்பர்களின் ஆலோசனையை, முடிந்த வரை, தங்கள் சொந்தக் கருத்துகளை விலக்கி வைத்து விட்டு கவனமாகக் கேட்பார்களோ, எந்த ஒரு ஐயமும் இன்றி ஏற்றுக் கொள்வார்களோ, மேலும் கபடமற்ற முறையில் நேர்மையாக அவர்களுக்கு பயன் தரக்கூடிய விஷயங்களை, ஆலோசனைகளை வழங்கியதற்கு தங்கள் நண்பர்களுக்கு நன்றி தெரிவிக்க முற்படுவார்களோ அது போலவே, நானும் எல்லா மார்க்கங்களைச் சேர்ந்த பெரியவர்கள் மற்றும் கற்றறிந்தவர்களிடம் எதிர்பார்க்கின்றேன். இஸ்லாம் இறைவன் புறத்திலிருந்து தோன்றிய மார்க்கம் என்பதற்கு ஆதாரமாக நான் முன்வைக்கும் வாதங்களையும், திருக்குர்ஆன் இறைவனது வார்த்தை என்பதையும், பிற வேதங்களைக் காட்டிலும் உயர்ந்தது என்பதையும் முடிவாகவும் மறுக்க முடியாத அளவிலும் நிலைநாட்ட நான் முன்வைக்கும் ஆதாரங்களை இறுதியானதாகவும் மறுக்க முடியாததாகவும் நீங்கள் காணும்போது, நீதி மற்றும் நேர்மையான உள்ளத்தோடு தப்பெண்ணம் மற்றும் கவனமற்ற நிலையில் விலகிச் செல்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பாக உள்ளது.

خاکساریم و سخن از رہ غربت گوئم یعلم اللہ کہ بکس نیست غبارے مارا

நான் தாழ்மை உடையவன். மேலும் மிகுந்த மரியாதையுடன் நான் கூறுகின்றேன். யார் மீதும் எந்த வெறுப்பும் எனக்கு இல்லை என்பதை அல்லாஹ் அறிகின்றான்

مانہ بیہودہ پے ایں سر و کارے برویم جلوۂ حسن کشد جانب یارے مارا

நான் இந்தப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொள்வது ஒரு வீணான செயல் இல்லை. என் நேசரின் அழகிய தோற்றமே என்னை அவரின்பால் ஈர்த்துள்ளது.




எனது அருமை மக்களே! மறுமை வாழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடிய மகிழ்ச்சியோ, துன்பங்களோ எந்த உண்மை மற்றும் கோட்பாடுகளைச் சார்ந்துள்ளதோ அவைகளை இன்மையிலேயே அறிந்து கொண்டு அதன் அடிப்படையில் உண்மையை நிலைநிறுத்தி தீமையை விட்டு விலகுவதே எல்லா ஞானமும் புத்தியுமாய் உள்ளது. ஈடேற்றம் மற்றும் நித்திய நல்வாழ்விற்கு அடிப்படையான காரியம் என்று மனிதன் கருதக்கூடிய நுட்பமான அடிப்படை நம்பிக்கைகளை

முழுமையான ஆணித்தரமான ஆதாரங்களின் அடிப்படையி-லேயே அமைத்துக் கொள்ள வேண்டும். தனது தாயாரோ பாட்டியோ தனது குழந்தைப் பருவத்தில் கூறிய கதைகளின் மயக்கத்திலோ பெருமையிலோ அமைத்து விடக்கூடாது. நம்பகத்தன்மையுடைய வாதங்களின் அடிப்படையில் அல்லாத புராணக்கதைகள் மற்றும் யூகங்களை பிடிவாதமாக பிடித்துக் கொண்டிருப்பது சுய ஏமாற்று வேலையாகும். அறிவுபூர்வமாக சிந்திக்ககூடிய நபர்கள் அனைவரும் தெரிந்தும் புரிந்தும் வைத்திருப்பது யாதெனில், எல்லா இறைவேதங்களும், அவற்றில் கூறப்பட்டுள்ள கோட்பாடு-களும், தங்களுக்கு ஈடேற்றம் வழங்கக்கூடும் என்றும் இறைவனுடன் ஒரு ஒப்புரவை ஏற்படுத்தும் என்றும் மேலும் இவைகளுக்கு மாறுபட்டு நடந்தால் அதன் அடிப்படையி-லேயே தண்டனையை அடைவோம் என்றும் வெவ்வேறு தேசங்களில் கருதக்கூடிய நிலையில், இவ்வேதங்கள் இறைவனது வார்த்தைதான் என்பதற்கான சான்று மட்டும் இருந்தால் போதாது என்றும் அடிப்படை பகுத்தறிவு மற்றும் தர்க்கஞானத்தின் அடிப்படையில் சோதித்தறியப்பட வேண்டியவை என்பதே.

உச்சபட்சமாக நம்பக்கூடிய வகையிலான, அறிவின் ஆதாரமாக, இருக்கக்கூடியது இறைவெளிப்பாடுகளே என்பது உண்மை என்றாலும், நிச்சய உறுதியானது இறைவெளிப்பாடு-களைச் சார்ந்ததாக இருப்பினும், அதற்கு சரிசமமான மற்றொரு உண்மை யாதெனில், வேதங்கள் கூறும் ஒரு விஷயம் பகுத்தறிவிற்கும் தர்க்கரீதியிலான அடிப்படைக்கும் எதிராக இருக்கும் பொழுது, வேதங்களின் அக்கூற்று தவறானதாக கருதப்படும். மேலும் போலியாக தயாரிக்கப்பட்டு இருக்கக்கூடும் என்றும் அல்லது இடைச்செருகல்களாக இருக்கக்கூடும் என்றும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

எந்த ஒரு விஷயமும், சரி அல்லது தவறு என்றோ அல்லது தர்க்கரீதியாக சாத்தியமானது அல்லது சாத்தியமற்றது என்றோ முடிவு செய்வது பகுத்தறிவின் தீர்ப்பை சார்ந்து இருக்குமெனில் எந்தக் கோட்பாடுகள் ஈடேற்றத்திற்கு அடிப்படையாக இருக்குமோ அந்தக் கோட்பாடுகளின் ஏற்புடையமையும் பகுத்தறிவின் தீர்ப்பையே சார்ந்து இருக்க வேண்டும். பல்வேறு சமயங்களில் அனுசரிக்கும் கோட்பாடுகள் பகுத்தறிவின் அடிப்படையில் நிரூபிக்கப்பட முடியாமல் போகும் எனில் அவைகள் உண்மையில் தவறானவையாகவும் நம்ப முடியாதவை-யாகவும் சாத்தியமற்றவையாகவும் நிரூபிக்கப்படும். எந்தெந்த கோட்பாடுகள் சரியானவை என்றும் எந்தெந்த கோட்பாடுகள் பொய்யானவை என்றும் நாம் எவ்வாறு அறிந்து கொள்ள இயலும். அதாவது உதாரணத்திற்கு பழைய கால இந்து வேதங்கள் தகுதியற்றவை என்றும் இஸ்ரேல் புத்திரர்கள் உடைய வேதங்கள் அதிகாரப்பூர்வமானவை என்றும் எவ்வாறு அறிந்து கொள்ள இயலும். மேலும் பகுத்தறிவின் அடிப்படையில் உண்மையையும் பொய்யையும் பிரித்தறியக் கூடிய வழி இல்லை எனில், உண்மையைத் தேடும் ஒருவர், அவைகளைப் பிரித்துப் பார்த்து இது சரியானது என்று ஏற்றுக் கொள்ளவும் அல்லது இது தவறானது என்று அதை விட்டு விலகவும் எவ்வாறு இயலும்? மேலும் அப்படியான கோட்பாடுகளை நம்ப மறுப்பவர்கள் யாராயினும் எவ்வாறு இறைவனின் முன்பு பொறுப்புச் சாட்டப்பட முடியும்.

மேலும், நாம், நமது ஈடேற்றத்திற்கு நிச்சயமாக பகுத்தறிவின் அடிப்படையிலான வாதங்களைச் சார்ந்துள்ள நம்பிக்கைகள் தேவை எனும் நிலைப்பாட்டை எடுக்கும் பட்சத்தில் இயல்பாகவே எழக்கூடிய கேள்வி யாதெனில் நிச்சயமான முழுமையான உறுதிநிலையை அடையக்கூடிய வாதங்கள் ஏதும் உண்டென்று கண்டுபிடிக்கக்கூடிய வழி ஏதேனும் உண்டோ என்பதுதான்.

இக்கேள்விக்குப் பதிலாக நான் சமர்ப்பிக்க நாடுவது, நிச்சயமாக நேர்த்தியான, எளிதில் அடையக்கூடிய வழியில், ஈடேற்றத்திற்கு ஏதுவான, உண்மையான கோட்பாடுகள் மற்றும் அதற்கு ஆதரவான வாதங்களை, நிச்சயஉறுதியுடன் எந்த ஒரு சிரமமோ மிகக் கடுமையான உழைப்போ ஏதுமின்றி எந்த ஒரு பிழையோ, சந்தேகமோ, தவறான எண்ணமோ, இல்லாது, நிச்சயமயற்ற நிலைக்கு இடம் அளிக்காத வகையில் கண்டடையக் கூடிய வழி திருக்குர்ஆனே ஆகும் என்பதே. வேறு எந்த நூலின் மூலமோ அல்லது வேறு எந்த வழியிலோ நாம் இப்பெரிய நோக்கத்தை அடைவது இயலாது.

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“...பூமியில் வாழும் மனித இனமே! மேற்கிலும் கிழக்கிலும் வாழும் ஆத்மாக்களே! நான் மிக அழுத்தமாக இதன் பக்கம் அழைக்கின்றேன். அதாவது, இப்பொழுது பூமியில் உண்மையான நெறி இஸ்லாம் மட்டுமே. திருக்குர்ஆன் கூறும் இறைவனே உண்மையான இறைவன்; நிலையான ஆத்மீக வாழ்வுடைய இறைத் தூதர் ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் அமர்ந்திருக்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார். அவர்களின் ஆன்மீக வாழ்வு மற்றும் தூய கம்பீரத்திற்கு நமக்கு இந்த ஆதாரம் கிடைத்துள்ளது. அவரைப் பின்பற்றுவது மற்றும் அவர் மீதுள்ள அன்பினால் நாம் பரிசுத்த ஆவி, இறைவனுடன் உரையாடுதல், விண்ணின் அடையாளங்கள் ஆகியவற்றின் அருட்கொடையைப் பெற்றுள்ளோம்.” (திரியாக்குல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 11)




## டிஜிட்டல் தொடர்பு சாதனங்களின் காலத்தில் அன்பும் தனிப்பட்ட உறவுகளும்

### கேள்வி:

அன்பிற்கினிய ஹுஸூர்! உலகின் மற்ற பகுதிகளைப் போலவே, நமது ஜமாஅத் உறுப்பினர்களும் இப்போது ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்காக வாட்ஸ்அப், குறுஞ்செய்திகள் மற்றும் மின்னஞ்சல் போன்ற தளங்களை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இந்தத் தொடர்பு சாதனங்கள் சந்தேகமின்றி பல வசதிகளை வழங்குகின்றன. இருப்பினும், இவற்றின் அதிகரித்து வரும் பயன்பாடு, நமது ஜமாஅத்தின் சிறப்பான அடையாளங்களில் ஒன்றாக இருந்த தனிப்பட்ட தொடர்பையும் இதயப்பூர்வமான நெருக்கத்தையும் படிப்படியாகக் குறைத்து வருவதாகத் தோன்றுகிறது.

எனவே, டிஜிட்டல் தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு அதிகரித்து வரும் இக்காலத்திலும், ஜமாஅத் உறுப்பினர்களுடன் நமது தனிப்பட்ட உறவுகளை எவ்வாறு பேணிக் காக்கலாம், மேலும் அவற்றை எவ்வாறு வலுப்படுத்தலாம் என்பது குறித்து அன்பிற்கினிய ஹுஸூர் அவர்களின் வழிகாட்டுதலைப் பணிவுடன் வேண்டுகிறோம். எங்கள் பரஸ்பர உறவுகள் உண்மையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், ஆழமான அன்பின் அடிப்படையில் உறுதியாகவும் நிலைத்திருக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

### ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் பதில்:

இது உங்கள் எண்ணம்தானே! நான் ஒருவருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினால், அல்லது ஏதேனும் காரணத்தால் ஒருவருடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தால், அவர் அதற்கு அன்புடன் பதிலளிக்கும்போது, என் உள்ளத்தில் அவருக்கான மதிப்பும் அன்பும் மேலும் அதிகரிக்கிறது. அல்லது நான் ஒருவருக்கு அன்புடன் பதிலளிக்கும் போதும் அதே உணர்வே ஏற்படுகிறது.

நீங்கள் குறுஞ்செய்திகளைப் பற்றியே பேசுகிறீர்கள். ஆனால், ஒரு காலத்தில் மக்கள் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டார்கள் அல்லவா? உருது மொழியில் ஓர் அழகான சொற்றொடர் உள்ளது:

“ஒரு கடிதம் என்பது அரைச் சந்திப்பைப் போன்றது” என்று கூறுவார்கள்.

அப்படியானால், குறுஞ்செய்தி அதை விடவும் விரைவான தொடர்பு முறையாகும். பழைய காலங்களில் ஒரு கடிதம் சென்றடைய பதினைந்து நாட்களோ அல்லது ஒரு மாதமோ கூட ஆகலாம். ஆனால் இன்று நாம் ஒரு குறுஞ்செய்தியை அனுப்புகிறோம். அடுத்த நொடியிலேயே அது அந்த நபரைச் சென்றடைகிறது. அதற்கு அன்பான பதில் வந்தால், அந்த நபருக்கு ஒரு உணர்வு ஏற்படும்: “ஆம், என் சகோதரர் என்னை நினைவில் வைத்திருக்கிறார். என் நண்பர் என்னை நினைத்திருக்கிறார்.”

எனவே, குறுஞ்செய்திகளின் காரணமாக அன்பு குறைந்து வருகிறது என்று கூறுவது உங்கள் எண்ணமாக இருக்கலாம். என்னுடைய எண்ணம் அப்படி அல்ல. எனக்குத் தெரிந்த வரையில், அதனால் அன்பு எதுவும் குறையவில்லை. மக்கள் எனக்கு ஏராளமான கடிதங்களை எழுதுகிறார்கள்.

இப்போது ஜமாஅத் மிகவும் பெரியதாகி விட்டது. அதன் உறுப்பினர்கள் இலட்சக்கணக்கிலும், கோடிக்கணக்கி -லும் உள்ளனர். எனக்கு தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. அவர்களில் சிலரை நான் நேரில் பார்த்திருக்கக் கூட மாட்டேன். ஆனால், அவர்கள் துஆவிற்காக என்னிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். அவர்களின் கடிதங்களைப் படிக்கும் போதே அவர்களுக்காக துஆ செய்கிறேன். பின்னர் தொழுகையின் போதும் அவர்களுக்காக துஆ செய்கிறேன். ஒவ்வொருவரின் பெயரும் நினைவில் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், பொதுவாக அவர்களுக்காகத் துஆ செய்யப்படுகிறது.

இதனால் அன்பு அதிகரிக்கிறது. இரவு உறங்கச் செல்லும்போது, நீங்கள் இவ்வாறு நினைத்துப் பாருங்கள்: “இவர்கள் என் சகோதரர்கள்; இவர்கள் என் சகோதரிகள். இவர்களுக்காக நான் துஆ செய்து விட்டு உறங்க வேண்டும்.” இவ்வாறு செய்தால், அவர்களுக்கான அன்பு உங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும். எனவே, நேரில் சந்தித்தால் மட்டுமே அன்பு அதிகரிக்கும் என்று கூறுவது சரியல்ல. நிச்சயமாக, சந்திப்பதன் மூலமும் அன்பு அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும்.

ஹதீஸிலும், ஒருவரை ஒருவர் அழைத்து விருந்தளிக்க வேண்டும். அதன் மூலம் அன்பு அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் ஒரே நகரத்தில் வசிக்கிறீர்கள் என்றால், பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள் அல்லவா? அன்ஸாருல்லாஹ்வின் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அங்கு செல்லுங்கள், ஒருவரை ஒருவர் சந்தியுங்கள். ஜுமுஆ தொழுகைக்குச் செல்கிறீர்கள். அங்கு சந்தியுங்கள். ஐந்து நேரத் தொழுகைகளிலும் கலந்து கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

அவ்வாறு ஒருவரை ஒருவர் சந்திப்பதில் கவனம் செலுத்தினால், அன்பின் உறவு நிலைத்திருக்கும்.அல்லாஹ் கூறுகிறான்: “எனக்காக நீங்கள் ஒருவரை ஒருவர் நேசித்தால்,

அதற்காக உங்களுக்கு நற்கூலி உண்டு.” உலகியல் நோக்கங்களுக்காக மட்டுமே ஒருவரை ஒருவர் நேசித்தால், அதற்கு எந்த ஆன்மிகப் பலனும் இல்லை.

எனவே, நீங்கள் அல்லாஹ்விற்காக ஒருவரை ஒருவர் நேசிக்கும்போது, தொழுகைக்கு வருபவர்களிடமும் அன்பு உண்டாகும். ஜுமுஆ தொழுகையில் சந்திப்பவர்களிடமும் அன்பு ஏற்படும். ஈது நாளில் நீங்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்கிறீர்கள். கோவிட் காலத்தில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ‘இதைச் செய்யாதீர்கள்; அதனைச் செய்யாதீர்கள்’ என்று பல கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால், மக்கள் அன்புடன் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டே இருந்தார்கள். அன்பு இருந்ததால், சந்திப்புகளும் தொடர்ந்தன.

எனவே, ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் தனது உள்ளத்தில் இந்த உணர்வைக் கொண்டிருக்க வேண்டும்: “நம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்கள் ஆவர். ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனின் நலனைக் கவனிக்க வேண்டும்.” மேலும், இந்த ஹதீஸை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: “உனக்காக நீ விரும்புவதை உன் சகோதரனுக்காகவும் விரும்ப வேண்டும்.” உங்கள் மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும்போது, அவை உங்கள் குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், உங்கள் சகோதரருக்காகவும் தோன்ற வேண்டும்.

உங்கள் சகோதரரின் குழந்தைகளுக்காகவும் நல்ல எண்ணங்கள் இருக்க வேண்டும்.

உங்கள் நண்பரின் குழந்தைகளுக்காகவும் நல்வாழ்வு மற்றும் நன்மையை விரும்ப வேண்டும். இத்தகைய எண்ணங்களே அன்பை வளர்ப்பதற்கான வழிகளாகின்றன.

பின்னர் நீங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, அது இரண்டு மாதங்களுக்குப் பிறகாக இருக்கலாம் ஆறு மாதங்களுக்குப் பிறகாக இருக்கலாம் ஒரு வருடத்திற்குப் பிறகாகவும் இருக்கலாம். ஆனால், அந்த அன்பு இதயத்தில் நிலைத்திருக்கும்.ஆப்பிரிக்காவில் பலர் தொலைதூரக் கிராமங்களிலும், மிகவும் ஒதுக்குப்புறமான பகுதிகளிலும் வாழ்கிறார்கள்.

அவர்கள் எனக்கு கடிதங்கள் எழுதுகிறார்கள். நமது பிரதிநிதிகள் அங்கு செல்லும்போது, அவர்கள் என் சார்பாக ஒருவருக்கு சலாம் தெரிவித்தால், சிலர் உணர்ச்சிவசப்பட்டு அழவும் செய்கிறார்கள். ஏன்? ஏனெனில், அவர்களுடைய இதயங்களில் அன்பு இருக்கிறது. அல்லாஹ் அவர்களுடைய இதயங்களில் அந்த அன்பை ஏற்படுத்தியிருக்கிறான்.

எனவே, நாம் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்: “அல்லாஹ்வே! எங்கள் இதயங்களில் அன்பை ஏற்படுத்துவாயாக. இந்தச் சிறுசிறு உலகியல் மனக்கசப்புகளின் காரணமாக எங்களுக்கிடையில் தூரம் உருவாக விடாதிருப்பாயாக.”

எனவே, குறுஞ்செய்திகளைப் பயன்படுத்துவதால் அன்பு குறைந்து வருகிறது என்று கூறுவது சரியல்ல.மாறாக, என் கருத்தில் குறுஞ்செய்திகள் அன்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஒரு எளிய வழிமுறையாக மாறியுள்ளன. முன்பு ஒருவர் கடிதம் எழுதுவார். இப்போது ஒரே நாளில் பலருடன் தொடர்புகொள்ள முடிகிறது. ஒருவருடன் பேசவும் முடிகிறது. வீடியோ அழைப்பின் மூலம் அவருடைய முகத்தையும் பார்க்க முடிகிறது. குறுஞ்செய்திக்கு உடனடியாக பதிலும் கிடைக்கிறது.

எனவே, நீங்கள் இவ்வாறு கேட்டிருக்க வேண்டும்: “இந்தச் சாதனங்களின் மூலம் அன்பு அதிகரித்துள்ளது. இப்போது அந்த அன்பை நாம் இன்னும் எவ்வாறு அதிகரிக்க முடியும்?”

பாகிஸ்தானிலிருந்து புதிதாக வந்துள்ள அன்சார் சகோதரர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கு இந்தச் சாதனங்களைப் பயன்படுத்தும் பழக்கமும் இருக்கிறது. குறுஞ்செய்திகளை உங்களை விட நன்றாகவே அவர்கள் பயன்படுத்தத் தெரிந்திருக்கலாம்!

இந்தியா அல்லது பாகிஸ்தானில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களிடையே கூட கைப்பேசிகளும் குறுஞ்செய்திகளும் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படு -கின்றன. ஆனால், புதிதாக வந்துள்ள சிலரிடம் கைப்பேசி இல்லாமல் இருக்கலாம். அல்லது, புதிய கைப்பேசி வாங்குவதற்கான வசதி அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களை நீங்கள் நேரில் சந்திக்க வேண்டும். அவர்களை பள்ளிவாசலுக்கு அழைக்க வேண்டும். பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் அழைக்க வேண்டும்.

ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு கூட்டங்கள் நடத்த வேண்டும். அது கட்டாயமாக ஒரு அதிகாரப்பூர்வக் கூட்டமாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. சில வார இறுதி நாட்களில் அனைவரும் சேர்ந்து வெளியே செல்லலாம். சுற்றுலா அல்லது பிக்னிக் ஏற்பாடு செய்யலாம். வேறு ஏதேனும் சமூக நிகழ்ச்சிகளை நடத்தலாம். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கான திட்டங்களை உருவாக்க வேண்டும் அல்லவா? குத்தாமுல் அஹ்மதிய்யாவில் குலூ-ஜமீஆ போன்ற ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளுக்கு ஒரு நடைமுறை உள்ளது. அதே போல் அன்சாருல்லாஹ்விலும் நடத்தலாம். லஜ்னாவிலும் இத்தகைய ஒன்றுகூடல்கள் நடைபெறுகின்றன. மக்கள் ஒன்றாக அமர்கிறார்கள். இறுதியில் அனைவரும் ஒன்றுகூடுகிறார்கள்.

இங்கே இஸ்லாமாபாத்திலும் லஜ்னா உறுப்பினர்களும் குத்தாமும் மற்ற ஜமாஅத் உறுப்பினர்களும் பல்வேறு பகுதிகளில் ஒன்றுகூடுகிறார்கள். வாரத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை சந்திக்கிறார்கள். ஒன்றாக உணவருந்துகிறார்கள். சகஜமாக உரையாடுகிறார்கள்.

அதே நேரத்தில் மார்க்கம் தொடர்பான விஷயங்களை -யும் பேசுகிறார்கள். நீங்களும் இதைச் செய்யலாம்.

(This Week with Huzoor - 1 மே 2026 நிகழ்ச்சியிலிருந்து)

# குழந்தைகளின் திரைநேரத்தின் (Screen Time) விளைவுகளும் இஸ்லாமியக் கண்ணோட்டமும்



ஜாஃபிர் அஹ்மத், அஹ்மதிய்யா ஆவணக் காப்பகம் மற்றும் ஆய்வு மையம்

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

### கவனக்குறைவு - ஆய்வுகள் வெளிப்படுத்தும் அதிர்ச்சியூட்டும் உண்மைகள்:

இன்றைய பெற்றோர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால்களில் ஒன்று, குழந்தைகளின் கவனக்குவிப்பு (Attention Span) குறைந்து வருவதுதான். கைப்பேசிகள், டேப்லெட்டுகள், தொலைக்காட்சிகள் போன்ற மின்னணு சாதனங்கள் எங்கும் நிறைந்திருப்பதால், குழந்தைகள் தொடர்ந்து பல்வேறு கவர்ச்சிகரமான தூண்டுதல்களுக்கு ஆளாகின்றனர். இதனால், அதிகமான திரைநேரம் (Screen Time) குழந்தைகளின் உடல், மன மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது? இது பற்றி ஒரு முக்கியமான ஆய்வு என்ன கூறுகிறது? மேலும், குழந்தைகள் ஆரோக்கியமாகவும் சமநிலையுடனும் வளர இஸ்லாம் பெற்றோருக்கு வழங்கும் வழிகாட்டுதல்கள் என்ன? என்பதைக் காண்போம்.

### குழந்தைகளின் கவனக்குவிப்பு ஏன் குறைகிறது?

சிறு வயது குழந்தைகளுக்கு இயல்பாகவே குறுகிய கவனக்குவிப்பு (Attention Span) இருக்கும். ஆனால், இன்றைய சூழலில் அவர்கள் எதிர்கொள்ளும் மின்னணு சாதனங்களின் தொடர்ச்சியான கவர்ச்சிகள் இந்தப் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

கைப்பேசிகளின் அறிவிப்புச் சத்தங்கள், எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிகள், கைக்கு எட்டியவாறு எப்போதும் இருக்கும் டேப்லெட்டுகள் ஆகியவை குழந்தைகளின் மனதை இடைவிடாமல் தூண்டுகின்றன. இதன் விளைவாக அவர்கள்:

- ❖ அதிக அமைதியின்மையுடன் காணப்படுகின்றனர்.
- ❖ மிக விரைவில் சலிப்படைகின்றனர்.
- ❖ புத்தக வாசிப்பிலும் உரையாடல்களிலும் ஆர்வம் இழக்கின்றனர்.

குழந்தைகளின் நல்லொழுக்க வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் முஸ்லிம் குடும்பங்களுக்கு இது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

### 2024-ஆம் ஆண்டின் ஆய்வு என்ன கூறுகிறது?

2024-ஆம் ஆண்டு Early Child Development and Care என்ற ஆய்விதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு மிகவும் கவலைக்கிடமான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வை ஷாங்காய் நார்மல் பல்கலைக் -கழகத்தின் ஆராய்ச்சியாளர்களான ஷுஜின் ழோ (Shujin Zhou) மற்றும் யான் லி (Yan Li) தலைமையிலான குழு மேற்கொண்டது. இந்த ஆய்வில் சீனாவின் ஷாங்காய் நகரிலுள்ள ஏழு அரசு மழலையர் பள்ளிகளில் படிக்கும் 3 முதல் 6 வயதுக்குட்பட்ட 571 குழந்தைகளின் தாய்மார்கள் பங்கேற்றனர். பெற்றோர்களிடம், தங்களுடைய குழந்தைகள் ஒரு நாளில் எவ்வளவு நேரம் திரை முன் செலவிடுகின்றனர் என்பது குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### ஆய்வின் முடிவுகள்:

ஒரு நாளுக்கு ஒரு மணி நேரத்திற்கும் அதிகமான திரைநேரம் குழந்தைகளுக்கு பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. அவர்களிடம்,

- ❖ அதிகப்படியான சுறுசுறுப்பு (Hyperactivity)
- ❖ அடிக்கடி கோபம் மற்றும் அழுகை (Tantrums)
- ❖ பிறருடன் பழகுவதில் சிரமம்
- ❖ கவனக்குறைவு

போன்ற பிரச்சினைகள் அதிகமாகக் காணப்பட்டன.

### ஆராய்ச்சியாளர் ஷுஜின் ழோ கூறுகிறார்:

“வேகமாக மாறிக் கொண்டிருக்கும் காணொளிகளும் விளையாட்டுகளும் குழந்தைகளின் மூளையை அளவுக்கு மீறித் தூண்டுகின்றன. இதனால் அவர்களின் தூக்கம் பாதிக்கப்படுகிறது. அவர்கள் அமைதியற்றவர்களாக மாறுகின்றனர்.”

### தூக்கம் அல்லாஹ்வின் அருட்கொடை:

குழந்தைகளின் மூளை வளர்ச்சியில் தூக்கம் மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. அவர்கள் பகலில் கற்றுக் கொண்ட மொழி, சமூகப் பழக்கவழக்கங்கள், உடல் இயக்கங்கள் போன்ற அனைத்தும் தூக்கத்தின்போது மூளையில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

தூக்கம் குறைந்தால்,

- ❖ கவனக்குவிப்பு குறையும்.
- ❖ எரிச்சல் அதிகரிக்கும்.
- ❖ கற்றுக் கொள்ளும் திறன் பாதிக்கப்படும்.
- ❖ நடத்தையில் மாற்றம் ஏற்படும்.

திருக்குர்ஆன் தூக்கத்தை அல்லாஹ்வின் அருளாகக் குறிப்பிடுகிறது: “உங்களுடைய தூக்கத்தை நாம் ஓய்வாக ஆக்கினோம்.” (திருக்குர்ஆன் 78:10)

எனவே, நல்ல தூக்கத்தைப் பாதுகாப்பது பெற்றோரின் முக்கியமான பொறுப்பாகும்.

### அதிகமான திரைநேரம் குழந்தைகளின் நடத்தையை எவ்வாறு பாதிக்கிறது?

நீண்ட நேரம் திரை முன் அமர்ந்திருக்கும் குழந்தைகள் பெரும்பாலும்:

- ❖ அமைதியற்றவர்களாக மாறுகின்றனர்.
- ❖ சீக்கிரமாக கோபப்படுகின்றனர்.
- ❖ பிறருடன் அடிக்கடி சண்டையிடுகின்றனர்.
- ❖ திரை இல்லாத நேரங்களில் எளிதில் சலிப்படைகின்றனர்.

வேகமான காட்சிகள், அதிக ஒலி, தொடர்ச்சியான காட்சி மாற்றங்கள் ஆகியவை அவர்களின் மூளையை தொடர்ந்து தூண்டுவதால், இயல்பான வாழ்க்கைச் செயல்பாடுகள் அவர்களுக்கு சுவாரஸ்யமற்றதாகத் தோன்றுகிறது.

### இஸ்லாம் வழங்கும் தீர்வு:

இஸ்லாம் எல்லா விஷயங்களிலும் நடுநிலையான அணுகுமுறையைப் போதிக்கிறது.

திருக்குர்ஆன் கூறுகிறது: “உங்களை நாம் நடுநிலை -யான சமுதாயமாக ஆக்கியுள்ளோம்.” (திருக்குர்ஆன் 2:143)

கைப்பேசிகள் குறித்து நேரடி கட்டளைகள் இல்லா விட்டாலும், குழந்தைகளின் வளர்ப்புப் பொறுப்பை இஸ்லாம் பெற்றோரிடம் ஒப்படைக்கிறது.


நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களில் ஒவ்வொருவரும் ஒரு பொறுப்பாளர். தமது பொறுப்பிற்கு உட்பட்டவர்களைப் பற்றி விசாரிக்கப்படுவார்.” (ஸஹீஹ் அல்-புகாரி, ஹதீஸ் 7138)

எனவே, பெற்றோர்கள் குழந்தைகளுக்கு தெளிவான திரைநேர வரம்புகளை அமைக்க வேண்டும்.

### படுக்கைக்குச் செல்லும் முன் திரையைத் தவிர்க்க வேண்டும்:

இரவு நேரத்தில் திரையைப் பயன்படுத்துவது குழந்தைகளின் உறக்கத்தை பாதிக்கிறது. திரைகளிலிருந்து வெளிவரும் நீல ஒளி (Blue Light), மெலட்டோனின் (Melatonin) எனப்படும் தூக்கத்திற்கான ஹார்மோனின் சுரப்பைத் தடுக்கிறது. இதன் விளைவாக,

- ❖ குழந்தைகளுக்கு தூக்கம் தாமதமாக வருகிறது.
- ❖ மறுநாள் சோர்வுடன் எழுகின்றனர்.
- ❖ கவனம் செலுத்த முடியாமல் போகிறது.
- ❖ எரிச்சல் அதிகரிக்கிறது.




ஆகவே, படுக்கும் நேரத்திற்கு முன் திரைச் சாதனங்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற விதியை பெற்றோர் மேற்கொள்வது மிகவும் பயனுள்ளதாகும்.

### வயதுக்கேற்ற பரிந்துரைக்கப்படும் திரைநேரம்:

#### வயது பரிந்துரை:

| | |
|---|---|
| 0-3 வயது | திரைச்சாதனங்கள் பயன்படுத்தாமல் இருப்பது சிறந்தது. அதிகபட்சம் 30 நிமிடங்கள் ஒலி (Audio) ஊடகங்கள், தினமும் புத்தகங்களைப் பார்க்கவும், வாசித்துக் காட்டவும் வேண்டும். |
| 3-6 வயது | திரைநேரம் அதிகபட்சம் 30 நிமிடங்கள்; ஒலி ஊடகங்கள் 45 நிமிடங்கள் வரை; புத்தக வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும். |
| 6-9 வயது | திரைநேரம் 45-60 நிமிடங்கள்; ஒலி ஊடகங்கள் 60 நிமிடங்கள் வரை; தினசரி வாசிப்பு அவசியம். |
| 9-12 வயது | நாளொன்றுக்கு 45-60 நிமிடங்கள். |
| 12-16 வயது | நாளொன்றுக்கு 1-2 மணி நேரம். |
| 16-18 வயது | குடும்ப விதிகளின் அடிப்படையில், வழிகாட்டுதலாக நாளொன்றுக்கு 2 மணி நேரம். |

அமைதியான இரவு பழக்கவழக்கங்களை உருவாக்குங்கள்:

குழந்தைகள் நன்றாக தூங்குவதற்கு சில நல்ல பழக்கங்களை பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். குறித்த நேரத்தில் தூங்கச் செல்வதும் தூங்குவதற்கு முன் அமைதியான பயனுள்ள சூழ்நிலையை ஏற்படுத்துவதும் சிறந்த பழக்கமாகும்.

1. கதைகள் வாசித்துக் காட்டுங்கள்

படுக்கைக்கு முன் நல்ல கதைகளை வாசித்துக் காட்டுவது,

- குழந்தைகளை அமைதிப்படுத்தும்.
- கற்பனைத் திறனை வளர்க்கும்.
- நல்ல பண்புகளைக் கற்றுக்கொடுக்கும்.

2. பிரார்த்தனை செய்யுங்கள்

இரவு நேரத்தில் தொழுகை செய்வதும், ஸூரத்துல் இக்லாஸ், அல்-பலக், அந்நாஸ் ஆகிய ஸூராக்களை ஓதுவதும் குழந்தைகளுக்கு ஆன்மிக அமைதியையும் அல்லாஹ்வின் பாதுகாப்பையும் அளிக்கும்.

3. உரையாடுங்கள்

அன்றைய நாளில் நடந்தவற்றைப் பற்றி குழந்தை -களுடன் அமைதியாகப் பேசுங்கள்.

இது,

- பெற்றோர், குழந்தை உறவை வலுப்படுத்தும்.
- குழந்தைகளின் உணர்வுகளை வெளிப்படுத்த உதவும்.
- மனநிம்மதியை ஏற்படுத்தும்.

திரைக்குப் பதிலாக என்ன செய்யலாம்?

குழந்தைகளுக்கு மிக முக்கியமானது பெற்றோரின் நேரமும் அன்பும் ஆகும்.

அதற்காக பெற்றோர்,

- குழந்தைகளுடன் விளையாடலாம்.
- கைவினைப் பொருட்கள் செய்யலாம்.
- நாடக விளையாட்டுகள் நடத்தலாம்.
- பலகை விளையாட்டுகள் (Board Games) விளையாடலாம்.
- வீட்டுப் பணிகளில் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.
- உறவினர்களைச் சந்திக்கலாம்.
- பூங்காவிற்கு அழைத்துச் செல்லலாம்.

இத்தகைய செயல்பாடுகள் குழந்தைகளின் சமூகத் திறனையும் பொறுப்புணர்வையும் வளர்க்கும்.

பெற்றோர்களே சிறந்த முன்மாதிரிகள்:

குழந்தைகள் பெற்றோர்களைப் பார்த்தே கற்றுக் கொள்கின்றனர். பெற்றோர்கள் எப்போதும் கைப்பேசியில் மூழ்கியிருப்பதை அவர்கள் பார்த்தால், அதையே பின்பற்ற விரும்புவார்கள்.

திருக்குர்ஆன் கூறுகிறது: “நீங்கள் செய்யாததை ஏன் கூறுகிறீர்கள்?” (திருக்குர்ஆன் 61:3)

எனவே,

- உணவு நேரங்களில்,
- குடும்ப உரையாடல்களின் போது,

கைப்பேசிகளை ஒதுக்கி வைப்பது நல்ல முன்மாதிரியாக அமையும்.

முடிவுரை:

அளவுக்கு மீறிய திரைநேரம் குழந்தைகளின் கவனக் குவிப்பு, உறக்கம், கற்றல் திறன் மற்றும் நடத்தையைப் பாதிக்கிறது என்பதை ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இஸ்லாம் பெற்றோருக்கு மிதமான அணுகுமுறை, பொறுப்புணர்வு மற்றும் நல்ல முன்மாதிரியாக இருப்பது போன்ற உயர்ந்த வழிகாட்டுதல்களை வழங்குகிறது. தெளிவான குடும்ப விதிமுறைகள், குழந்தைகளுடன் செலவிடப்படும் தரமான நேரம், ஆன்மிகப் பழக்கவழக்கங்கள் மற்றும் பெற்றோரின் நல்ல முன்னுதாரணம் ஆகியவற்றின் மூலம், தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்திய படியே, குழந்தைகள் உடல், மனம், அறிவு மற்றும் ஆன்மிக வளர்ச்சியில் சமநிலையுடன் வளர முடியும்.

(அல்ஹகம் 13 மார்ச் 2025)

